பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 தை 13 புதன்கிழமை (26.01.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :61

## பட்டப்பகலில் பலர் பார்த்திருக்க வீதியில் இளைஞர் சுட்டுக்கொலை!

### மஹரகமவில் நேற்றுச் சம்பவம்

கொழும்பு.ஜன.26

பட்டப்பகலில் வீதியில் வைத்து இளைஞர் ஒருவர் பலர் பார்த்திருக்கச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச் சூட்டுச் சம்பவம் நேற்று நண்பகல் 12.45 மணியளவில் மஹரகம நகரில் இடம்பெற்றுள்ளது.

மஹரகம நகரின் வீதியோரத்தில் மூன்று நபர்கள் வாக்குவாதப்பட்டுக்கொண்டிருந்தனர் என்றும்-

திடீரென வெடிச்சத்தங்கள் கேட்டன என்றும் -

அச்சமயம் இளைஞர் ஒருவர் கீழே விழுந்துகிடக்க இருவர் தப்பியோடினர் என்றும் சம்பவத்தை நேரில்கண்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சூட்டுச் சம்பவத்தில் நிசாந்த அல்விஸ் என்ற இளைஞரே (16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பதில் தாக்குதலில் கருணா குழு உறுப்பினர் பலி!

### கதிரவெளியில் ஞாயிறன்று சம்பவம்

மட்டக்களப்பு.ஜன.26

விடுதலைப் புலிகளின் முகாம் மீது தாக்குதல் நடத்திய கருணா குழு உறுப்பினர் ஒருவர் பதில் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். மட்டக்களப்பு, கதிரவெளியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பனிச்சங்கேணியில் அமைந்துள்ள புலிகளின் முகாம்மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கருணா குழுவைச் சேர்ந்தவர் ஆர்.பி.ஜி. தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்ப முயன்ற சமயமே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

புலிகளின் முகாம் மீது ஆர்.பி.ஜி. அடித்துவிட்டுத் தப்பமுயன்ற சமயம் எமது ஏனைய அணிகள் சுற்றிவளைத்துப் பதில் தாக்குதல் நடத்தியதில் கருணாகுழு உறுப்பினர் கொல்லப்பட்டார் - என்று உதயனுக்குத் தெரிவித் (16 ஆம் பக்கம் பார்க்க)

# இன்று துக்கம்!

## ஆழிப்பேரலை அனர்த்தம் காவுகொண்ட ஆயிரக்கணக்கானோருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜனவரி 26

**ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கானவர்களின் முதலாம் மாத நினைவுதினமான இன்று, வடக்கு - கிழக்கு உட்பட தமிழர் பிரதேசங்களில் தேசிய துக்கதினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.**

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் சிக்கி நாடு முழுவதும் இதுவரை 30,957 பேர் உயிரிழந்துள்ளனர் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 5,637 பேரைக் காணவில்லை. 3 லட்சத்து 92 ஆயிரத்து 48 பேர் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் தமிழர்கள்.

இந்த இயற்கைப் பேரனர்த்தத்தால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இன்றைய தினத்தை விடுதலைப் புலிகள் தேசிய துக்கதினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர். இதனையொட்டி இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகளுக்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரதேசத்திலும் விசேட அஞ்சலி நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குடாநாட்டிலும் வன்னிப் பெருநிலப் பரப்பிலும் இன்று பல்வேறு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம் வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் காலை 6.45 மணிக்கு விசேட பூசை நடைபெறும். 9 (16 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் இன்று 'நம்பிக்கை ஒளி'

கொழும்பு.ஜன.26

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையான எதிர்காலத்திற்கும், மரணித்தவர்களின் ஆத்மசாந்திக்காகவும் வேண்டி 'நம்பிக்கை ஒளி' என்ற 31 ஆம் நாள் ஞாபகார்த்த ஆராதனை நிகழ்வு ஒன்று இன்று நடைபெறுகின்றது.

கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செய்துள்ளது.

கடந்த டிசெம்பர் 26ஆம் திகதி சிறிதும் எதிர்பாராத வகையில் ஏற்பட்ட ஆழிப்பேரலை பேரழிவை ஏற்படுத்தி ஒரு சூனியத்தன்மையை உருவாக்கிவிட்டது. இதுபாதிக்கப்பட்டவர்களை மட்டுமல்ல நம் ஒவ்வொருவருடைய இதயத்தி (16 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகள், அலுவலகங்கள் இன்று வழமைபோல் இயங்கும்

யாழ்ப்பாணம்.ஜன.26

சுனாமி பேரனர்த்தத்தை நினைவுகூரும் தேசிய துக்கதினமான இன்று பாடசாலைகள் மற்றும் அரச அலுவலகங்கள் வழமைபோன்று இயங்கும் என்றும் போக்குவரத்துச் சேவைகளும் தடைப்படமாட்டா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தோரை நினைவுகூரும் வைபவங்கள் பாடசாலைகளிலும் நடைபெறும். ஒளியேற்றவும், கறுப்புக்கொடிகளைப் பறக்கவிடவும் ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் சீர்குலைய இடமளிக்காத வகையில், துக்கம் அனுஷ்டிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டு அங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்படும். (ஐ)

## நிவாரணப் பணிக்கான பொதுக்கட்டமைப்பு தொடர்பான அறிவிப்பு பெப்.6இற்கு முன்னர்?

### அதற்கு முன் அரசு - புலிகள் இணங்கிப்போவர்

கொழும்பு.ஜன.26

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது பற்றிய இணக்க அறிவிப்பு எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பான பேச்சுக்களில் அரசு மற்றும் புலிகளின் சமாதானச் செயலகங்கள் தற்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளன. இத்தகைய பொதுக் கட்டமைப்புத் தொடர்பாகச் சர்வதேச நாடுகளும், உலகவங்கி போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களும் வலியுறுத்தி வருகின்றன.

அடுத்த மாதம் 6 ஆம் திகதி ஜெனிவா தலைநகர் பிரஸல்ஸில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறும். அதில் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணமாக இலங்கைக்கு கணிசமான நிதி உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை அரசுக்குக் கிடைக்கும் நிவாரண உதவிகள் தமிழர் பகுதிகளுக்குச் சரிவரப் பகிரப்படுவதில்லை என்று குற்றச்சாட்டுகள் எழும் நிலையில், நிவாரணப் பணிகளுக்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பான ஓர் இணக்கப்பாட்டுக்கு அரசும், புலிகளும் வரவேண்டும் என்று சர்வதேச நாடுகள் வலியுறுத்துகின்றன. பிரஸல்ஸ் மாநாட்டுக்கு முன்பாக இந்த இணக்க நிலை எட்டப்படவேண்டும் என்றும் அவை அழுத்தம் கொடுப்பதாகத் தெரிவிக்கப் (16 ஆம் பக்கம் பார்க்க)

## பொது இடங்களில் சோககீதம்; நண்பகல் ஒளியேற்றப்படும்

### அலுவலகப் பணியாளர்கள் கறுப்புப்பட்டி அணிவர்

யாழ்ப்பாணம், ஜன.26

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக உயிரிழந்தோரை நினைவுகூரும் தேசிய துக்கதினமான இன்று நண்பகல் 12 மணிக்கு வணக்கஸ்தலங்களிலும் நலன்புரி நிலையங்களிலும் ஒளியேற்றும் நிகழ்வு இடம்பெறும். இதற்கான ஏற்பாடுகளைப் பொது அமைப்புகள் செய்துள்ளன.

பொது இடங்களில் சோககீதம் இசைக்கப்படும். அரச மற்றும் தனியார், கூட்டுறவுத்துறைப் பணியாளர்கள் கறுப்புப்பட்டி அணிந்து தத்தமது கடமைகளில் ஈடுபடுவர்.

இதுதொடர்பாக யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் விடுத்த அறிக்கை வருமாறு:-

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாகத் தமிழர் தாயகத்திலும் ஏனைய தெற்காசிய நாடுகளிலும் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் முகமாக இன்று புதன்கிழமை தேசிய துக்கதினமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது தாங்கள் அறிந்ததே! இந்நாளில் தமது அன்புக்குரியவர்களையும் உறவுகளையும் இழந்து துடிக்கும் எமது உறவுகளின் சோகத்தில் நாமும் பங்குகொள்வோம். மூர்க்கமாக எழுந்த கடல் அலைகளில் சிக்கி எமது உறவுகள் உயிர் நீத்த இந்நாளைத் தமிழர் தாயகத்திலும் தமிழர் வாழும் அனைத்து (16 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு சுதந்திர சதுக்கத்திலும் இன்று பல்வேறு அஞ்சலி நிகழ்வுகள்

கொழும்பு.ஜன.26

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்ட ஒருமாத காலத்தை நினைவுகூருமுகமாக இன்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் பல்வேறு நிகழ்வுகளை நடத்த சௌமிய இளைஞர் நிதியம் ஏற்பாடு செய்துள்ளது.

இறந்தவர்களினது ஆத்மசாந்திக்கான சர்வமத பிரார்த்தனை, மௌனவிரதம், அனைத்துத் தரப்பினரையும் ஒரே மேடையில் அமர்த்தி மீள்கட்டியெழுப்பப்படும் வேலைத்திட்டங்கள் எவ்வித பாகுபாடுமின்றி நடைபெறுவதற்கான உறுதி மொழி எடுத்தல், அனர்த்த ஞாபகார்த்த சின்னத்திற்கான அடிக்கல் நாட்டுதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

செடெக் நிறுவனம், சர்வமத சமாதான நிதியம், போருக்கெதிரான தேசிய முன்னணி, சகவாழ்வு மன்றம் போன்ற அமைப்புகளுடன் இணைந்து சௌமிய இளைஞர் நிதியம் இந் நிகழ்வை ஒழுங்குபடுத்தியுள்ளது.

சர்வமத தலைவர்கள், அரசியல் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவ, மாணவிகள், பொதுமக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் இந் நிகழ்வில் கலந்துகொள்வர்.

அனர்த்தத்தால் இறந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மற்றும் வெளிநாட்டவர்களினது உருவங்களை உள்ளடக்கிய ஞாபகார்த்த சின்னம் நிறுவப்படவுள்ளது. வருடா வருடம் டிசெம்பர் 26 ஆம் திகதி இவ்விடத்தில் ஞாபகார்த்த நிகழ்வுகளை நடத்தவும் (16 ஆம் பக்கம் பார்க்க)





சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குத் தென்கொரிய அரசு பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளது. கொரிய நாட்டுப் பிரதிநிதியான திருமதி ஜோன் ஆடோ நேற்று இந்த உபகரணங்களைக் கையளித்தார். இதன்போது யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரனைச் சந்தித்து அவர் அறிமுகம் செய்வதை முதல் படத்தில் காணலாம்.
சுனாமி அனர்த்தக் கூட்டுச் செயலணியினருடன் ஜோன் ஆடோ கலந்துரையாடுவதையும், அவருடன் வருகை தந்த கொரியக் குழுவினரையும் அடுத்த படங்களில் காணலாம். யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் எஸ்.யோகராஜனும் படத்தில் காணப்படுகிறார். (படங்கள்: சி.சுந்தரலிங்கம்)

# மாணவருக்கு கற்றல் உபகரணங்களை தென்கொரியப் பிரதிநிதி வழங்கினார்

கரவெட்டி,ஜன.26

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்களைத் தென்கொரிய அரசு வழங்கி உதவியுள்ளது.

விமானங்களில் எடுத்துவரப்பட்ட இந்தப் பொருள்களை நேற்றுக் கொரிய நாட்டின் இலங்கைக்கான பிரதிநிதி நேற்று வடமராட்சியில் சுனாமி அனர்த்தக் கூட்டுச் செயலணியிடம் கையளித்தார்.

பல்கலைக்கழக மாணவர்கள், மருத்துவர்கள் அடங்கிய 40 பேர் கொண்ட குழுவுடன் தென்கொரியப் பிரதிநிதி திருமதி ஜோன் ஆடோ நேற்று வடமராட்சிக்கு வருகை தந்தார்.

முற்பகல் 11.30 மணியளவில் அவர் அங்கு கூட்டுச் செயலணிப் பிரதிநிதிகளைச் சந்தித்தார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன், அரசியல்துறையின் ஊடகத் தகவலாளர் இமையவன் மற்றும் அரசியல்துறையைச் சேர்ந்த பாலையா ஆகியோருடனும் அவர் கலந்துரையாடினார்.

புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் தங்கியுள்ள மாணவர்களுக்கும் ஏனைய நலன்புரி முகாம்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலை உபகரணப் பொதிகளைக் கொரியக் குழுவினர் வழங்கினர்.

இவ்வைபவத்தில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் என்.யோகராஜனும் கலந்து கொண்டார். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் உபகரணப் பொதிகளைத் தாங்கள் வழங்கவுள்ளதாக திருமதி ஜோன் ஆடோ தெரிவித்தார். (ஐ-70)

## மாணவர்களை தொடர்புகொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.26

சுனாமிப் பேரலையால் பாதிப்படைந்து வேறு நிறுவனங்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளாத மாணவர்களை தமிழ் மாணவர் ஒன்றியத்துடன் தொடர்புகொள்ளுமாறு தமிழ் மாணவர் ஒன்றியத்தின் யாழ்.மாவட்டத் தலைவர் கேட்டுள்ளார்.

சுனாமி பேரலையால் பாதிப்புற்றுள்ள தொழில்நுட்பக் கல்லூரி, யாழ். பலகலைக்கழகம் மற்றும் பாடசாலை ஆகியவற்றைச் சார்ந்த மாணவர்களைத் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடக்குறிப்புக்களை தொலைத்த மாணவர்களுக்கு அவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-13)

# அமெரிக்கக் கடற்படையின் மருத்துவக் குழு திரும்பியது

## மந்திகையில் ஜேர்மன் டாக்டர்கள் பணிக்கு

வடமராட்சி,ஜன.26

சுனாமி பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கெனச் சிகிச்சை வழங்க வடமராட்சிக்கு வந்திருந்த அமெரிக்கக் கடற்படை மருத்துவக் குழுவினர் தமது கடமைகளை முடித்துக்கொண்டு நேற்றுக் கொழும்பு திரும்பினர்.

ஆறு வைத்தியர்கள் அடங்கிய 22பேர் கொண்ட அமெரிக்க மருத்துவக் குழுவினர் சுமார் பத்து தினங்களுக்கு மேலாக வடமராட்சியில் உள்ள பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையிலும் சில நலன்புரி நிலையங்களிலும் பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோர்களுக்குச் சிகிச்சையளித்து வந்தனர்.

இவர்கள் திரும்பிச் செல்வதற்கு முன்னர் தாம் மேற்கொண்ட பணியினை ஜேர்மனியிலிருந்து வந்த வைத்தியக்குழுவினரிடம் நேற்று முன்தினம் மாலை ஒப்படைத்தனர்.

11 பேர் கொண்ட ஜேர்மன் மருத்துவக் குழுவினர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் தமது சேவையினை ஆரம்பித்துள்ளார்கள். (ஐ-173)

# புகுமுக மாணவர்களை பதிவு செய்யுமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ். பல்கலைக்கழகத்திற்குப் புதிய கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பீடரீதியாக மேற்கொள்ளப்படவுள்ள பதிவுகளில் வர்த்தக, முகாமைத்துவ பீடமாணவர்கள் நாளை வியாழக்கிழமையும் பெப்ரவரி14ஆம் திகதியும் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

கலைப்பீட மாணவர்கள் பெப்ரவரி முதலாம், 2ஆம் ,3ஆம் திகதிகளிலும் - சித்த மருத்துவபீட மாணவர்கள் பெப்ரவரி 7ஆம் திகதியும் சட்டபீட மாணவர்கள் எதிர்வரும் 10ஆம் திகதியும் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - விவசாய பீடத்தின் பதிவுகள் நேற்று இடம்பெற்றன. விஞ்ஞான பீடத்தின் பதிவுகள் யாவும் இன்று இடம்பெறவுள்ளன.

புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. எனவே; மாணவர்கள் விரைவாகப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-13)

# 2ஆம் லெப். இறையவனின் வித்துடல் நேற்று விதைப்பு

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் அஞ்சலி உரை

கரவெட்டி,ஜன.26

கடந்த 22ஆம் திகதி விசுவமடுவில் வாகன விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சையின்போது உயிரிழந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இரண்டாம் லெப்டினன்ட் இறையவனின் வித்துடல் நேற்று விதைக்கப்பட்டது.

இறையவனின் (சந்திரவதனன் கமலேஸ்வரன்) வித்துடல் தாங்கிய பேழை நேற்றுப் பிற்பகல் கரவெட்டி ஞானசாரியார் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டது.

துன்னாலை - நெல்லியடி வீதியில், அமைக்கப்பட்ட விசேட மலர்ப்பந்தலில் உடல், மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் எஸ்.தவயோகம் தலைமையில் அங்கு அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிவநேசன், எஸ்.கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன், மாவை சோ.சேனாதிராசா, மா.க.ஈழவேந்தன் ஆகியோர் அஞ்சலி உரையாற்றினர். அதன் பின்னர் அலங்கார ஊர்தியில் உடல் ஊர்வலமாக நெல்லியடி, வதிரிச் சந்தி, உடுப்பிட்டி வீதி, நவிண்டில் வழியாக வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

வழியெங்கும் பொதுமக்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

பிற்பகல் 4.30 மணியளவில் வித்துடல் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. (ஐ-70)

## வடமராட்சியில் அந்தியேட்டிக் கிரியைகள்

வடமராட்சி,ஜன.26

சுனாமிப் பேரலை அனர்த்தத்துக்குள் சிக்குண்டு மரணமானோர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்றையதினம் வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு பகுதிகளில் இடம்பெற்றன.

சிலரது அந்தியேட்டிக் கிரியைகள் இன்றும் நடைபெறவுள்ளன. வியாபாரிமூலை எரிஞ்ச அம்மன் கோயிலடி அந்தியேட்டி மடத்தில் மாத்திரம் நேற்றைய தினம் 42 அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெற்றன. (ஐ-173-70)



விசுவமடுப் பகுதியில் கடந்த 22ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்து பின்னர் வீரச்சாவடைந்த இரண்டாம் லெப்டினன்ட் இறையவனின் உடல் கரவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம். (படம்: சி.சுந்தரலிங்கம் கரவெட்டிச் செய்தியாளர்)

# வடமராட்சியில் ஏழு பாடசாலைகள் இந்த வாரம் இயங்கத் தொடங்கும்

வடமராட்சி,ஜன.26

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள 12 பாடசாலைகளில் 7 பாடசாலைகள் இவ்வாரம் முதல் மீள ஆரம்பமாகவுள்ளன.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி, வல்வெட்டித்துறை மகளிர் கல்லூரி, பொலிகண்டி இந்துத் தமிழ்க்கலவன் பாடசாலை, பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, வேலாயுதம் மகாவித்தியாலயம், தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகிய 7 பாடசாலைகளிலிருந்து இடம்பெயர்ந்தோர் அனைவரும் வெளியேறியதையடுத்தே இப்பாடசாலைகள் மீள ஆரம்பமாகவுள்ளன.

இப்பாடசாலைகளில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்கள் தமது வீடுகளிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும், தற்காலிக கூடாரக் குடிசைகளிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

தம்பசிட்டி மெதடிஸ்தமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெயர்ந்தோர் தங்கியிருப்பதால் அப்பாடசாலையை அருகில் உள்ள 'போரூட்' கட்டடத்தில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் கொற்றாவத்தை அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை, மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலயம், குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய 5 பாடசாலைகளிலும் இடம்பெயர்ந்தோர் தொடர்ந்து தங்கியுள்ளனர்.

இடம்பெயர்ந்தோர் வெளியேறிய 7 பாடசாலைகளும் தற்போது சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன. சுத்திகரிப்புப் பணி நிறைவுற்றதும் பாடசாலைகள் ஆரம்பமாகும். (ஐ-173)

## வவுனியா வளாக மாணவருக்கு

யாழ்ப்பாணம்,ஜன.26

2004 - 2005 கல்வி ஆண்டுக்காக வவுனியா வளாகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரையும் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாக வளாகத்திற்கு வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு வவுனியா வளாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் நி.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

2004-2005 கல்வியாண்டில் கல்விகற்கத் தெரிவாகியுள்ள புகுமுக மாணவர்கள் அனைவருக்கும் அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே, இந்த அனுமதி அட்டைகள் கிடைத்தவர்கள், கிடைக்காதவர்கள் அனைவரும் எம்முடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளலாம். அத்துடன், கஷ்ரபோரப் பிரதேசங்களில் உள்ள வவுனியா வளாகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு அனுமதி அட்டைகள் கிடைக்காதவிடத்து அவர்களும் தொடர்புகொண்டு தமது மாணவப் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-203)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837.

## ஆரோக்கிய அறிவிப்பு இன்றாவது வருமா?

தென்னாசியப் பிராந்தியத்தில் கடற்கரையோரப் பிரதேசங்களைக் கொடூரமாகத் தாக்கி உலகையே பேரதிர்ச்சிக்குள் ஆழ்த்திய ஆழிப் பேரலை அனர்த்தம் நிகழ்ந்து இன்றுடன் ஒரு மாதம் பூர்த்தியாகின்றது.

இலங்கையில் சுமார் 40 ஆயிரம் பேர் உட்பட மொத்தம் ஏறத்தாள இரண்டரை லட்சம் பேரின் உயிரைக் காவு கொண்ட மிக மோசமான இயற்கைச் சீற்ற அழிவு இது.

காணாமற்போனோர் எண்ணிக்கையோ பல்லாயிரம். வீடு வாசல்களையும் உற்றார், உறவினர்களையும், அன்பு உறவுகளையும் இழந்து ஏதிலியானோர் எண்ணிக்கையோ பல லட்சங்கள். உடைமை இழப்புக்களோ ஆயிரக்கணக்கான பில்லியன் டொலர்கள்.

பல்லாயிரம் மைலுக்கு அப்பால் ஆழிக்குள் நிகழ்ந்த மோசமான நில அதிர்வுகள் பேரலைகளாக எழுந்து யாரும் எதிர்பாராத விதத்தில் கடற்கரைகளைக் கபளீகரம் செய்தபோது உலகமே அதிர்ச்சியில் உறைந்து போனது. ஆனால் அடங்கிப் போய்விடவில்லை.

கண நேரத்தில் சுதாகரித்துக்கொண்டு அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர மீட்பு, நிவாரண, மீள் கட்டுமான உதவிகளை வழங்குவதற்கு உலகமே முண்டியடித்துத் திரண்டமை வரலாற்றில் புதிய அம்சம்; அதிசயமும் கூட. அவசர மீட்பு நிவாரணப் பணிக்கு உலகின் பல்வேறு பக்கங்களிலிருந்தும் உதவிகள் குவிந்த விவகாரத்தைச் சர்வதேச நிறுவனங்கள் சரித்திரத்தில் முன்னெப்போதும் இல்லாத உலக ஐக்கிய நிகழ்வு என விவரித்ததை விதந்துரைக்கலாம்.

இந்தப் பேரழிவுகளும் தாக்கங்களும், நாசங்களும் கோரங்களும், அழிவுகளும் அவலங்களும் உலக ஊடகங்களின் பக்கங்களையும், திரைகளையும் ஒலி வாங்கிகளையும் நிரப்பத் தொடங்கி இன்றுடன் ஒரு மாதமாகின்றது.

இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாம் என்ன செய்தோம், என்ன செய்யப்போகிறோம் என்பதே இப்போதைய கேள்வியாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை வடக்கு - கிழக்கு, தெற்கு ஆகிய மூன்று பக்கங்களிலுமே - தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என மூவினத்தவரும் - பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சாதி, மத, இன, பிரதேச வேறுபாடுகளின்றி ஆழிப்பேரலைகள் இலங்கையில் தமது கைவரிசையைக் காட்டியிருக்கின்றன.

பாதிக்கப்பட்ட பகுதிகளின் அவசர மீட்புப் பணியைப் பொறுத்தவரை புலிகளின் நிர்வாகப் பிரதேசத்தில் அது விரைந்தும், துரிதமாகவும், முறையாகவும், சீராகவும் நடைபெற்றிருப்பதாகப் பக்கச்சார்பற்ற செய்தி நிறுவனங்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றன.

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலோ அரச நிர்வாக இயந்திரம் தாமதமாக - ஆரம்பத்தில் மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்த பின்னரே - முழித்துக்கொண்டது. எனினும், உள்ளூர் அயலவர்களும், பொது அமைப்புக்களும் ஓடோடி வந்து முழுவீச்சில் முதற்கட்ட மீட்புப் பணியில் ஈடுபட்டமை சுட்டிக்காட்டப்பட்டிருந்தது; அது பாராட்டத்தக்கது.

இப்போது முதற்கட்டமான அவசர மீட்புப் பணிக்கான காலம் தாண்டிவிட்டது. இனி நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகள் குறித்துச் சிந்தித்துத் துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கையில் ஆழிப்பேரலையால் அதிகம் பாதிக்கப்பட்ட பிரதேசம் தமிழர் தாயகம்தான். தமிழர்களும் முஸ்லிம்களுமே மோசமான அழிவுகளுக்கும், இழப்புகளுக்கும், அவலங்களுக்கும் உள்ளானவர்கள்.

ஆனால், அனர்த்தப் பாதிப்புகளிலிருந்து மக்களுக்கு மறுவாழ்வளிக்கும் மீள்கட்டுமானப் பணிகளுக்கான அவசர ஆரம்ப வைபவங்கள் தெற்கில்தான் நடந்திருக்கின்றன. தமிழர் தாயகத்தில் இதற்கான திட்டங்கள் கூட தீட்டப்பட்டன என்பதற்கான சமிக்ஞைகளைத் தன்னும் அரசு வெளிப்படுத்தவில்லை.

மீள்கட்டுமானத்துக்கென சர்வதேச சமூகம் வாரி வழங்கும் உதவிகளை தமிழர் தாயகத்துக்குச் சமச்சீராய் பகிராமல் தெற்குக்கென அரசு சுருட்டிக்கொள்ளப்போகின்றதோ என்ற சந்தேகம் - விசனம் - தமிழர்களின் மனதிலும், முஸ்லிம்களின் மனதிலும் தோன்றியிருக்கின்றது.

இந்த நிலைமையில்தான் அனர்த்தத்திலிருந்து மக்களை மீட்டெடுத்து, அவர்களுக்கு மீள்வாழ்வளிக்கும் பணிகளுக்குச் சர்வதேச சமூகம் வழங்கும் உதவிகளை, சரிவரப் பகிர்வதற்கான பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதில் அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் இணக்கம் ஒன்றும் ஏற்படுவதற்குக் கால்கோள் இடப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இதுதொடர்பாக அரசுத் தலைமைக்கும், புலிகள் தலைமைக்கும் இடையில் தகவல் மற்றும் கருத்துப் பரிமாற்ற நடவடிக்கைகளில் நோர்வேத் தரப்பு மாறி மாறிப் பறந்து பறந்து ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

இந்தப் பேரனர்த்தம் காரணமாகத் தமிழர் தாயகத்திலும், தெற்கிலும் தெற்காசிய நாடுகளிலும் உயிரிழந்தவர்களை நினைவு கூருமுகமாக இன்று துக்கதினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

தமது அன்புக்குரியவர்களையும், உறவுகளையும் இழந்து துடிக்கும் நம் சகோதரர்களின் சோகத்தில் நாமும் பங்குகொள்வோம்.

அதேசமயம், உயிர் பிழைத்தும், அனர்த்தப் பாதிப்பினால் அவல வாழ்வில் சிக்கித்தவிக்கும் அப்பாவிகளின் வாழ்வை மீள்வித்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து - அது சம்பந்தமான பொதுக்கட்டமைப்புக் குறித்து - திட்டவட்டமான அறிவிப்பு ஏதும் இந்தத் துயர நாளிலாவது வெளியாகுமானால், அது துன்பக்கடலில் சிக்கி சொல்லொணாத் துயரத்தில் மூழ்கிக்கிடக்கும் அம்மக்களை சற்றேனும் ஆற்றுதல்படுத்தும் - ஆசுவாசப்படுத்தும் - என்பது திண்ணம்.

## பாதிக்கப்பட்ட மக்களின் சுகவாழ்வுக்கு ஏற்றதாக குடிசைகள் அமையவேண்டும்

### கலந்துரையாடலில் கேணல் சூசை தெரிவிப்பு



திருவையாறு.ஜன.26

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் சுகவாழ்வுக்கு ஏற்றவகையில் குடிசைகள் அமைத்துக்கொடுக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிப்புற்று நலன் புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான கலந்துரையாடல் கடந்த வாரம் மருதங்கேணி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களை மீளக் குடியமர்த்துவதற்காக இடைத்தங்கல் முகாம்கள் துரித கதியில் அமைக்கப்பட்டு வருகின்றன.

திட்டமிடல் அபிவிருத்தி செயலகத்தினால் முன்மொழியப்பட்டு அமைக்கப்பட்டு வரும் கூடாரங்களை நேரில் சென்று பார்த்தேன்.

அமைக்கப்படும் இக்கூடாரங்கள் அதிக வெப்பத்தை உள்வாங்கும் தன்மையுள்ளவை. விரைவில் பழுதடையக்கூடியவை சுக வாழ்வுக்கு ஏற்றவையல்ல. இதனால் இக்கூடாரங்களிற்குப் பதிலாகக் கிடுகுகளினால் வேயப்பட்ட குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் - என்றார்.

இக்கலந்துரையாடலில் பொது அமைப்புகள், அரசசார்பற்ற நிறுவனங்கள், ஐ.நா. செயலணிக் குழு அங்கத்தவர்கள், அரசியல்துறை உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை - கூடாரங்கள் அமைக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டு கிடுகு வேயப்பட்ட குடிசைகள் அமைக்கும் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

(10-204)

## பாதிப்புற்ற பாடசாலைகளுக்குக் கொட்டில்கள் 'யுனிசெவ்' நிறுவனம் அமைத்துக் கொடுக்கும்

வடமராட்சி.ஜன.26

வடமராட்சி கிழக்கில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை மீள இயங்கவைப்பதற்குத் தேவையான வகுப்பறைக் கொட்டில்களை அமைத்துக் கொடுக்க யுனிசெவ் நிறுவனம் முன்வந்துள்ளது.

மணற்காடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, மாமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க பாடசாலை, தாழையடி றோமன் கத்தோலிக்க பாடசாலை, ஆழியவளை சி.சி.த. பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க பாடசாலை, கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆகிய பாடசாலைகள் பேரலை அனர்த்தத்தால் பெரிதும் சேதமடைந்துள்ளன.

இப்பாடசாலைகளை அலை அமைந்துள்ள இடங்களுக்கு அப்பால் பாதுகாப்பான இடங்களில் செயற்பட வசதியாக 100X20 அடி நீள. அகலம் கொண்ட தற்காலிக வகுப்பறைகளை யுனிசெவ் அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது.

இத் தற்காலிக வகுப்பறைக் கட்டடங்களுக்கு சிமெந்தில் நிலம் இடப்பட்டு கொங்கிறீற்றிலான அரைச் சுவரும் கூரைத் தகட்டினால் வேய்ந்தும் கொடுக்கவுள்ளது.

இதுதவிர யுனிசெவ் நிறுவனம் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு சீருடைத் துணிகள், அதற்கான தையல் கூலிகள், சப்பாத்துக்கள் என்பனவற்றையும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கோல உடைகளைப் பெறுவதற்காக தலா 3ஆயிரத்து 500 ரூபா வீதமும் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

(10-173)

## இலங்கையின் சமாதானம் குறித்து பெல்ஜியத்தில் உயர்மட்ட மாநாடு

### அமெ. அமைச்சர் ஆர்மிடேஜும் பங்கேற்பார்!

கொழும்பு.ஜன.26

இலங்கையின் சமாதான முன்னேற்றம் பற்றி ஆராயும் உயர்மட்ட மாநாடு இவ்வாரம் பெல்ஜியத்தில் நடைபெறவுள்ளது.

அமெரிக்க வெளிநாட்டு அலுவல்களுக்கான பிரதி அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் இவ்வாரம் பெல்ஜியத்துக்கு விஜயம் செய்யவுள்ளார். இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பான தற்போதைய நிலைபற்றி சக நன்கொடை நாடுகளுடன் பேச்சு நடத்துவது அவருடைய நோக்கமாகும் என்று அமெரிக்க வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையின் புனர்நிர்மாண மீள் அபிவிருத்தி தொடர்பான டோக்கியோ மாநாட்டில் கலந்துகொண்ட நோர்வே, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளையும் அவர் பிரான்ஸில் சந்திக்கவுள்ளார்.

டோக்கியோ மாநாட்டில் கலந்துகொண்ட வெளிநாட்டு அரசுகளும் பன்னாட்டு நிறுவனங்களும் இலங்கைக்கு 450 கோடி டொலர்களை வழங்கப் போவதாக உறுதியளித்திருந்தனர்.

பெல்ஜியத்தில் நடைபெறும் மாநாட்டில் இலங்கையில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு மனிதாபிமான உட்கட்டமைப்பு அபிவிருத்தி உதவிகள் மறுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அமெரிக்க வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்திருக்கின்றது.

(து-7)

## பகிரங்க ஏலத்தில் விருதினை விற்று விவசாய வளர்ச்சிக்குச் செலவிட முடிவு

### விருது பெற்ற முதலியார் முன்னோடிச் செயற்பாடு

வலி.தெற்கு.ஜன.26

வடக்கு - கிழக்கு பகுதிகளின் சிறந்த விவசாயியாகத் தெரிவுசெய்யப்பட்டு ஹெல்ப்பேஜ் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட விருதினை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்து அந்த நிதி யாழ். மாவட்ட விவசாய வளர்ச்சித் தேவைகளுக்குப் பயன்படுத்தப் போவதாக மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர் சி.பொ. வ.மா.க.முதலியார் அறிவித்துள்ளார்.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளன விசேட பொதுக் கூட்டத்தின்போது அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இந்த நாட்டில் பெய்கின்ற ஒரு துளி மழை நீரைக்கூடக் கடலுக்குச் செல்ல அனுமதிக்கக்கூடாது எனக் கூறிய மகா பராக்கிரமபாகுவின் சிலை விருதை அவர் வழி நின்று செயற்படுத்திப் பரிசாகப் பெற்றுக் கொண்ட முதலியார், தமக்குக் கிடைத்த மகா பராக்கிரமபாகுவின் சிலை விருதினை ஏலத்தில் வழங்குவதாகக் கூறி ஏல ஆரம்ப தொகையாக 100 மில்லியன் ரூபாவை முன்வைத்துள்ளார். ஏலத்தில் பெறப்படும் பணம் எமது பிரதேச விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் எனவும் முதலியார் தெரிவித்துள்ளார்.

(து-152)

## கீரிமலைக் கேணிப் பகுதியில் காவலரண் அமைக்கும் படையினர்

கீரிமலைக் கேணிப் பகுதியில் கடற்படையினரும் ராணுவத்தினரும் இணைந்து காவல் அரண்களை அமைக்கும் முயற்சியில் துரிதமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கீரிமலைக் கேணியின் பெண்கள் பகுதிக்கான சுற்று மதில்கள் இடிந்து வீழ்ந்துள்ளமையால் அந்த மதில்களின் கற்களும் காவல் அரண்கள் அமைப்பதற்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

ஆண்கள் கேணிப் பகுதியைச் சுற்றி அடுக்கப்பட்டிருந்த கற்களில் ஒரு பகுதி உடைந்துள்ளபோதிலும் அக்கற்கள் வேறாக அடுக்கி வைக்கப்பட்டு இருப்பதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

கீரிமலையில் பிதிர்க்கடன் செலுத்தும் பழைய மடமே தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(10-86)

## நல்லூரில் பிரார்த்தனை

யாழ்ப்பாணம்.ஜன.26

சக்தி தொலைக்காட்சி மற்றும் வானொலி நிறுவனத்தினர் இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலக அனுசரணையுடன் சுனாமி அனர்த்தத்தினால் உயிர் இழந்தவர்களது ஆத்மா சாந்தியடையவும் பாதிக்கப்பட்டவர்கள் ஆறுதல் அடையவும் வேண்டி நடத்தும் பிரார்த்தனை இன்று காலை 9மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அருள் உரைகளும் இடம்பெறவுள்ளன.

(10-204)

### நாளை

தை 14
27.01.2005
வியாழக்கிழமை
திதி : துதியை
முன்னிரவு 8.17 வரை
நட்சத்திரம் : மகம்
முழுவதும்
சுபநேரம் 8.06 - 9.36
ராகுகாலம் 2.06-3.36
(யாவும் பழைய நேரப்படி)

## கப்டன்·மகாலிங்கத்தின் நினைவுக்கல் திரைநீக்கம்

முல்லைத்தீவில் சுனாமி அனர்த்தத்தின்போது உயிரிழந்த கப்டன் மகாலிங்கத்தின் (பெற்றோர் ஐயா இராசப்பன் மகாலிங்கம்) 31 ஆவது நாள் நினைவு தினமான இன்று அவரது நினைவுக் கல் வடமராட்சி மாவீரர் துயிலும்இல்லத்தில் திரைநீக்கம் செய்யப்படுகின்றது.

வல்லை ஆதிகோயிலடியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று அவரது உருவப்படம் குடும்ப வீட்டுக்கிருத்தியங்களுக்காக வைக்கப்படும்.

நாளை காலை 9.30 மணியளவில் ஆதிகோயிலடி சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு. பி.ப. 3.30 மணியளவில் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக் கல் திரைநீக்கம் செய்யப்படும். (து-70)

### உதயவாக்கு

ஆகாயத்தில் ஆண்டவனை வைத்திருக்கும் மனிதர்களிடம் ஏமாந்து விடாதே.

- பெர்னாட்ஷா.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

கலர்மீன்கள், மீன்தொட்டிகள், லவ்பேட்ஸ், யாவா, பிஞ்சஸ், ஆபிரிக்கன் லவ்பேட்ஸ், கொக கொடைல் குருவிகளும், கூடுகளும் மற்றும் அடுக்குச் செவ்வரத்தை, றோசாக் கன்றுகள், குறோட்டன், பூச்சாடிகள் அனைத்தும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11, சீனியர் லேன், தட்டாதெருச் சந்தி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (41246)

சொந்தப் பாவனையில் உள்ள நல்ல நிலையில் உள்ள மொறிஸ் மோட்டார் கார் (4 சிறி xxxx இலக்கமுடையது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செந்தில்மணி தவத்துரை, மாதா கோயிலடி, தும்பளை, பருத்தித்துறை. (C/40635)

### காணி விற்பனைக்கு

உரும்பிராய் தெற்கு அம்பாள் கோயிலுக்கு அருகாக 4½ ஐப் பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.சிவசுப்பிரமணியம், சட்டத்தரணி, உரும்பிராய். (41283)

### வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண தேவை. (தங்கி நின்று வேலையாற்றுபவர் விரும்பத்தக்கது). தொடர்பு: R.விஸ்வலிங்கம், இல.235, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (41183)

### உடன் விற்பனைக்கு

150 நாள் வளர்ந்த பிறிமா சிவப்பு முட்டை இடும் பேட்டுக் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சைன், லவ்லேன், உடுவில். (41286)

### தையல் வேலைக்கு ஆள் தேவை

எமது தையல் நிலையத்துக்குத் தையல் வேலை தெரிந்த அனுபவமுள்ள ஆண்கள் உடன் தேவை.

தொடர்பு: **மேவின் தையல் நிலையம்,**
28, நவீனசந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.
(41295)(42-17)

### உடன் தொடர்பு கொள்ளவும்

எமது ஸ்தாபனத்தில் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் தவறவிடப்பட்ட பெறுமதி மிக்க தங்க ஆபரணம் ஒன்று எம்மிடம் உள்ளது. உரியவர்கள் உடன் தொடர்பு கொண்டு தகுந்த ஆதாரங் காட்டிப் பொருளைப் பெற்றுச்செல்லவும்.

**கணேசன் சென்ரர்**
கே.கே.எஸ்.வீதி,
இணுவில்.
(40632)(42-17)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா, புறொயிலர் குஞ்சுகள் இன்று 26.01.05 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ் - ஆனைக்கோட்டைச் சந்தி, T.P.: 222 2867, 222 3529, P.ரவி - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, தாரகை - கால்நடைத்தீவன விற பனை நிலையம், முதலாம் கட்டை பருத்தித்துறை, றஞ்சீத் - 517, ஸ்ரான்லி றோட். (41203)

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 31.01.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக்கிளையிலும், சூட்டிபாம் - வட்டுக்கோட்டை, R.S.K.பாம் - உடுவில், சுன்னாகம், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (40990)

### இறைச்சிக் கோழி விற்பனை

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) அத்துடன், Prima பேட்டுக்குஞ்சுகள் (2-3 மாதம் வரை) விற்பனைக்குண்டு. (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (41015)

## அதிபர் நியமனம் விரைவில

யாழ்ப்பாணம்,ஜன.26

மானிப்பாய் மெமோறியல் நவோதயா கலலூரிக்குப் புதிய அதிபர் விரைவில் நியமனம செய்யப்படவுள்ளார்.

அதிபர் பதவிக்கு நியமனம் செய்யப்படும போது அக்கல்லூரியல் நீண்டகாலம் ஆசிரியராகவும் - குறிப்பிட்ட காலம் உப அதிபராகவும் அதிபராகவும் இருந்த திருமதி ச. யோகேஸ்வரனை நியமிக்குமாறு கல்விச் சமூகம் கேட்டுள்ளது. (10-185)

## மலிவு விற்பனையும் சிறந்த சேவையும்

சுனாமியினால் பாதிக்கப்பட்டு நிர்மாணிக்கப்படும் வீடுகளுக்குத் தேவைப்படும் மரவகைகள் உடனடியாக வழங்கப்படும்.

வீடுகள் அமைக்கத் தேவையான தென்னை மரத் தீராந்திகள், சிலாகைகள் மற்றும் பலகை வகைகள், கதவுகள், யன்னல்கள், கதவுநிலைகள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. வட பகுதியில் எப்பகுதிக்காயினும் நியாயமான விலையில் கொண்டு வந்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:

**லலித் செனவிரத்ன,**
**B.M.C. வுட் ஹவுஸ்,**
683, கொழும்பு வீதி,
குதுக்வத்த, கடுகண்ணாவ.
T.P.: **0777-712923.**
(40638)(42-17)

### "ஆத்ம சாந்திப் பிரார்த்தனை"

26.12.2004 அன்று "ஆழிப்பேரலை"யின் அனர்த்தத்தால் உயிரிழந்தோரின் குடும்பத்தவர்க்கும், உறவினர்க்கும் ஆறுதல் தெரிவிப்பதோடு, உயிரிழந்த அனைவரினதும் ஆத்ம சாந்திக்காக இணுவில் மஞ்சத்தடி அரசோலை விநாயகனையும், மஞ்சத்தடி முருகப் பெருமானையும் இறைஞ்சுகின்றோம்.

இன்று 26.01.2005 மாலை 6.00 மணியளவில் மஞ்சத்தடி அரசோலை விநாயகர் ஆலயத்தில் - ஆத்ம சாந்தி வேண்டி நடைபெறவுள்ள விசேட கூட்டு வழிபாட்டில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இணுவில் மஞ்சத்தடி விவேகானந்தா சனசமூக நிலையத்தினர்.**
(41292)(42-17)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் தைத்திங்கள் 14ஆம் நாள் (27.01.2005) வியாழக்கிழமை காலை 10.18 மணிமுதல் 11.54 மணிவரையுள்ள திதியைத் திதியும் மக நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்,



எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறைசெல்வன்
**பிறேமச்சந்திரன்**
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறைசெல்வி
**நடேஜினி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறும் தொடர்ந்து நடைபெறும் மதியவிருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

**31.01.2005 (திங்கட்கிழமை) மணமகன் இல்லத்தில் நடைபெறும் மதியவிருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

தங்கள் நல்வரவை இனிதே நாடும்:

திரு.திருமதி இராசரத்தினம் தம்பதிகள்
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

திரு.திருமதி நடராசா தம்பதிகள்
பிள்ளையார் கோவில் வீதி,
வெளிக்குளம்,
வவுனியா.

(இருவீட்டார் அழைப்பு) (சி-40639)(24-17-42)

சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் தைத்திங்கள் 14ஆம் நாள் (27-01-2005) வியாழக்கிழமை காலை 10.18 மணி முதல் 11.54 மணி வரையுள்ள மகம் நட்சத்திரமும், மீன லக்கினமும் அமிர்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்,

திரு.திருமதி தர்மலிங்கம் தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரன்
திருவளர் செல்வன்
**தர்மபாலன் (சுரேஷ்)**
அவர்களுக்கும்

திரு.திருமதி பாக்கியநாதன் தம்பதிகளின்
க்னிஷ்ட புத்திரி
திருவளர் செல்வி
**தெய்வச்செல்வி (தெய்வி)**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு அருள்மிகு ஸ்ரீ அத்தியடி விநாயகர் ஆலயத்தில் அமைந்துள்ள கணபதி கலாசார மண்டபத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துசிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

**திரு.திருமதி தர்மலிங்கம் குடும்பம்**
நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

**திரு.திருமதி பாக்கியநாதன் குடும்பம்**
8/4, சிவன் புதுவீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

(41273)(26-17-16) (இருவீட்டார் அழைப்பு)

## இல்லற பந்தத்தின் ஓராண்டு நிறைவு நாள் வாழ்த்துக்கள்

**26.01.2005**



இல்லறமெனும் நல்லறத்தில் இணைந்து இன்று முதலாம் ஆண்டை நிறைவுசெய்து இரண்டாம் ஆண்டில் காலடி வைக்கும் மணமக்களான

**திரு.விக்னேஸ்வரன் (கண்ணன் - சர்மி) திருமதி சர்மிளா**

தம்பதிகளை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சீருஞ்சிறப்பும் பெற்று நூறாண்டுகாலம் இனிதே வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

அப்பா - ஜயாத்துரை,
அம்மா - அன்னலட்சுமி,
தம்பி - கேதீஸ்வரன் (கோபி) பிரான்ஸ்,
மாமா - கமலநாதன் குடும்பத்தினர்.

அப்பா - அமிர்தலிங்கம், அம்மா - செல்வராணி,
அண்ணா - கபிலன், அண்ணி - விநோதினி - தருண்,
சின்னண்ணா - தீசன், தங்கை - மதி, தம்பி - சிவன்
(கோட்டைக்காடு, மல்லாகம்).

(41284)(24-17-42)

# மலையக எழுத்துத்துறைக்கு தொண்டு செய்த பத்திரிகையாளர்

பத்திரிகையாளர் எஸ்.எம்.கார்மேகம் கடந்த 19ஆம் திகதி சென்னையில் காலமான செய்தி அவரை அறிந்திருந்த அனைவருக்குமே கவலையை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதைவிட அவருடன் சமகாலத்தில் பணிபுரிந்து அவரோடு சேர்ந்து பழகிய பத்திரிகையாளர்களுக்கு இன்னும் அதிக கவலைய்யை ஏற்படுத்தியிருக்கும்.

வீரகேசரி பத்திரிகை நிறுவனத்தில் ஊழியர் பிரச்சினை பூதாகரமாகத் தோற்றம் பெற்று, கதவடைப்பும் ஊழியர் புறக்கணிப்பும் நடைபெற்ற 60வதுகளில் புதிய ஊழியர்களையும் சுயநலம் கருதி உள்ளே புகுந்த சில பழைய ஊழியர்களையும் வைத்து மீண்டும் சிறிதுகாலத்திலேயே அங்கு பிரபல்யம் மிக்க பத்திரிகையாளராகப் பரிணமிக்கலானார்.

குறிப்பாக, மலையக மக்கள் மத்தியில் அப்பத்திரிகையை மேலும் பரப்புவதற்குப் பல செயற்பாடுகளை முன்னெடுத்தார்.

விசேஷமாக மலையக இளைஞர்களை எழுதத் தூண்டுவதற்கும் எழுதக்கூடியவர்கள் மத்தியில் கட்டுரை. கவிதை, சிறுகதைப்போட்டிகளை நடத்துவதற்கும் காலாகவிருந்தார்.

'வீரகேசரி' அக்காலத்தில் நடத்திய மலையக சிறுகதைப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்கள் பிற்காலத்தில் புகழ்பெற்ற எழுத்தாளர்களாகவும் வந்துள்ளார்கள்.

மலையக எழுத்தாளர் மன்றம் உருவாவதற்கு உறுதுணையாக இருந்ததோடு, அதில் ஓர் உறுப்பினராகவும் இருந்தார்.

## பத்திரிகையாளர் கார்மேகம்: ஓர் அஞ்சலிக் குறிப்பு

அப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் கார்மேகம் இளம் புதிய பத்திரிகையாளராக அந் நிறுவனத்தில் தன்னை இணைத்துக்கொண்டார்.

சமீபகாலம் வரை அப்பத்திரிகையின் முதுநிலைப் பத்திரிகையாளராக இருந்து வந்தவரான நடராஜாவும்கூட விளம்பரப் பகுதியிலிருந்து ஆசிரியர் பகுதிக்கு அக்காலத்தில் தான் முன்னேற்றம் பெற்றார். இன்னும் பல இளைஞர்கள் அக்காலத்தில் வீரகேசரியில் இணைந்துகொண்ட போதிலும் கார்மேகம்

வீரகேசரியில் இருந்து அவர் விலகியதன் பின்னணி எமக்குத்தெரியாது, அதன்பின் தமிழ்நாடு சென்று அங்குள்ள தமிழ்பத்திரிகைகளிலும் பணிபுரிந்தார். அக்காலத்தில் அப்பத்திரிகைகளின் செய்தியாளராக வடக்கு - கிழக்குப் பகுதிக்கும் வந்து சென்றார்.

கார்மேகம், தன்னை எந்தவோர் அரசியல் கட்சிகளோடும் இனங்காட்டிக்கொள்ளாது போனாலும் மலையகத்தின் மிகப்பெரிய தொழிற்சங்கமாக விளங்கிய இ.தொ.காங்கிரஸ் ஸ்தாபனத்தோடு நெருக்கமாகத் தொடர்புகொண்டிருந்ததோடு, அந்த ஸ்தாபனத்தின் தலைவர்களோடும் சரளமாகப் பழகினார்.



வீரகேசரிப் பத்திரிகையில் மலையகத்துக்கென ஒரு பகுதியை உருவாக்கி அதனை சிறப்புற நடத்திய பெருமை அவருக்கு உண்டு. அதன்வாயிலாக ஏராளமான எழுத்தார்வமிக்க மலையக இளைஞர்களை எழுதத் தூண்டி வளர்த்தெடுத்தார்.

தமிழ்நாட்டில் இருந்தபோதிலும் அடிக்கடி இலங்கைக்கு வந்து தனது தொடர்புகளை உறுதிசெய்துகொண்டது ஒருபுறமிருக்க, இலங்கையின் அரசியல் நிலைமைகளிலும் வெகுவாக அக்கறை கொண்டிருந்தார். மலையகத்தில் பிறந்து, வளர்ந்தவரான கார்மேகம் தமிழ்நாட்டில் தமது 60ஆவது வயதில் காலமானார்

60களில் மலையக எழுத்துத்துறையில் ஒரு மாற்றம் ஏற்படுவதற்குக் களம் அமைத்துக் கொடுத்தவரான கார்மேகம், அப்பகுதியில் சரிவு கண்டிருந்த அப்பத்திரிகையின் வளர்ச்சிக்கும் உதவினார். பத்திரிகைத் துறையில் தமக்கு ஏற்பட்டிருந்த அனுபவம் காரணமாக ஒருசில நூல்களையும் எழுதி அவர் வெளியிட்டுள்ளார். (பேனா)

## கூடாரங்களை அமைக்க 'யுனிசெவ்' உதவும்

வடமராட்சி,ஜன.26

மருதங்கேணிக் கோட்டத்தில் சேதமடைந்த பாடசாலைகளையும், நலன்புரி நிலையங்களாகச் செயற்படும் பாடசாலைகளையும் மீளவும் இயங்கவைப்பதற்காகத் தற்காலிக கூடாரங்களை அமைத்துக் கொடுப்பதற்கு 'யுனிசெவ்' நிறுவனம் வாக்குறுதியளித்துள்ளது.

மருதங்கேணியில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் இந்த வாக்குறுதியினை 'யுனிசெவ்' பிரதிநிதி அளித்தார்.

சுனாமி அனர்த்தம் காரணமாக மருதங்கேணிக் கோட்டத்தில் பல பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. 6 பாடசாலைகள் நலன்புரி நிலையங்களாகச் செயற்பட்டு வருகின்றன.

அப்பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களையும் வழங்க 'யுனிசெவ்' நிறுவனம் உறுதியளித்துள்ளது. (ஐ-182)

## வடக்கு - கிழக்கு அரச அதிகாரிகள் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

கிளிநொச்சி,ஜன.26

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள் வடக்கு - கிழக்கு மாகாண சபைப் பிரதிநிதிகள் ஆகியோர் நேற்றுமுன்தினம் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைக் கிளிநொச்சியில் சந்தித்துப் பேசினர்.

புலிகளின் திட்டமிடல் அபிவிருத்திச் செயலகத்தில இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் பொறிமுறைத்திட்டம் பற்றி இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. (க-8)

# கிராம அலுவலர்கள் வழங்கும் சான்றிதழ்களின் நம்பகத் தன்மையைக் கண்காணிக்க உத்தரவு

### அமைச்சின் சுற்றறிக்கையில் விவரம்

வலி.மேற்கு,ஜன.26

கிராம அலுவலர்களினால் வழங்கப்படுகின்ற சான்றிதழ்களின் நம்பகத்தன்மை குறித்து நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதுதொடர்பான பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் நாடு பூராவுமுள்ள அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோர்களுக்குச் சுற்றறிக்கை ஒன்றினை அனுப்பிவைத்துள்ளார்.

கிராம அலுவலர்களினால் பிரதேச செயலர்களுக்குப் பரிந்துரை செய்யப்படுகின்ற வதிவிட தகைமைச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், குணநலச் சான்றிதழ் ஆகிய சான்றிதழ்கள் பொய்யான தகவல்களுடன் பொது மக்களுக்கு வழங்கப்படுவது அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதனால் உண்மைத் தன்மை, நம்பகத்தன்மை இல்லாமல் போகின்றது. ஆதலால் கிராம அலுவலர்கள் இச்சான்றிதழ்களை வழங்கும்போது பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும். பிரதேச செயலர்களும் கவனித்துக்கொள்ளவேண்டும். தொடர்ந்தும் கிராம அலுவலர்கள் பொய்யான தகவல்களுடன் சான்றிதழ்களை வழங்கினால் மிகவும் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்று அந்தச் சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-175)

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு 'கியூடெக்' உதவிப் பொருள்கள்

வலி.தெற்கு,ஜன.26

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு முல்லைத்தீவுப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி மற்றும் தென்மராட்சிப் பிரதேசங்களிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு 'கியூடெக்' நிறுவனம் அத்தியாவசிப் பாவனைப் பொருள்களை வழங்கிவருகிறது.

சாவகச்சேரி நலன்புரி முகாமில் தங்கியுள்ள மக்களுக்கு அருட்தந்தை ரவிச்சந்திரன் தலைமையிலான குழுவினரால் கடந்த வாரம் பொருள்கள் வழங்கப்பட்டன.

வடமராட்சியில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக 'கியூடெக்' நிறுவன இயக்குநர் அருட்திரு.சி.ஜெயக்குமார் அடிகளார் தெரிவித்தார். (த-190-152-204)

## வடமராட்சியிலும் சீருடைத்துணி விநியோகம்

வடமராட்சி கிழக்கு,ஜன.26

வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத்துணிகள் வந்துசேர்ந்துள்ளன.

இச்சீருடைத்துணிகளைப் பாடசாலை அதிபர்கள் மூலம் மாணவர்களுக்கு வழங்குவதற்கு வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மருதங்கேணிப் பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத்துணிகள் மாணவர்களுக்கு வழங்குவதற்காக லொறிமூலம் மருதங்கேணிக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. (ஐ-182)

# புதிதாகத் திறந்த ஆஸ்பத்திரியில் 'வார்ட்' வசதிகள் இன்னமும் இல்லை

### மருதங்கேணியில் இந்த நிலைமை

வடமராட்சி கிழக்கு,ஜன.26

மருதங்கேணி அரசினர் கிராமிய வைத்தியசாலை புதிதாக நிர்மாணிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்ட போதிலும் எவ்வித செயற்பாடும் அற்றநிலையில் உள்ளது.

2000ஆம் ஆண்டு யுத்தத்தின்போது முற்றாகச் சேதமடைந்த இந்த வைத்தியசாலையினை 'நிக்கொட்' திட்டத்தின்கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கி சுமார் ஒரு கோடி 23 லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணித்தது.

இந்த வைத்தியசாலையில் உள்ள பிரசவ விடுதி, நோயாளர்களுக்கான வார்ட் ஆகியன இன்னமும் இயங்கத் தொடங்கவில்லை.

வைத்தியசாலை திறக்கப்படுவதற்கு முன்னர் தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கிவந்த வெளிநோயாளர் பிரிவு மட்டுமே இப்போது வைத்தியசாலையில் இயங்கிவருகின்றது.

ஆளணிப் பற்றாக்குறை காரணமாகவே பிரசவ விடுதி, நோயாளர்களுக்கான 'வார்ட்' ஆகியன இயங்கமுடியாமலிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வியாழக்கிழமை அப்பகுதிக்கு விஜயம் செய்த யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேசிடம் இப்பகுதியில் உள்ள பொது அமைப்புகள் இது குறித்து சுட்டிக்காட்டின.

அன்றையதினம் மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் யாழ். மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் எவரும் அதில் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-182)

## தாழையடி தபாலகம் இயங்குகிறது

வடமராட்சி கிழக்கு,ஜன.26

தாழையடி உபதபால் நிலையம் மீண்டும் தாழையடியில் தனியார் கட்டடம் ஒன்றில் இயங்க ஆரம்பித்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் தாழையடி உபதபால் நிலையம் சேதமடைந்ததையடுத்து தற்காலிகமாக அது பளை தபால் நிலையத்தில் இயங்கிவந்தது. (ஐ-182)





சுனாமி ஆழிப்பேரலையால் அழிந்துபோன குடாநாட்டின் கடற்கரையோர பிரதேசங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்ட வந்திருந்த அரபிய நாடான கட்டாரில் இயங்கும் 'அல்ஜசீரா' தொலைக்காட்சி நிறுவனத்தின் ஊடகவியலாளர்கள் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம் பரிதியுடன் உரையாடுவதை முதலாவது படத்திலும் -

கனடா நாட்டின் 'குளோபல் நஷனல்' தொலைக்காட்சி நிறுவனத்தின் ஊடகவியலாளர் அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்திப்பதனை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: பிரபா)

# கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம்
## மருதனார்மடம்

நன்றி செலுத்தும்
நற்கருணை வழிபாடு

அன்புடையீர்!

அருட்திரு.
**சேவக் சாம் T. அல்பிரட்**
[சாம் அண்ணன்]

நினைவாகவும் அவர் தம் வாழ்வுக்கும், திருப்பணிக்குமாக இறைவனுக்கு நன்றி கூறும் நற்கருணை வழிபாடு இன்று [26-01-2005] புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆச்சிரம ஆலயத்தில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(41247)(46-43-15) - பரிபாலனசபை.

## பாதிப்புற்ற சிறுவர்களுக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம்,ஜன.26

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கென வல்வெட்டித்துறை கலா மன்றம் 2லட்சத்து 12 ஆயிரத்து 500 ரூபாவினை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சுனாமி அனர்த்த அவசரகால நடவடிக்கைப் பணியகத்திற்கு வழங்கியுள்ளது.

இந்த மன்றத்தின் இளைஞர்கள் ஒன்றிணைந்து 'விடிவைக் காத்திரு' என்னும் நிகழ்வினை நடத்தினர். இந்நிகழ்வின போது பெறப்பட்ட நிதியினையே சிறுவர்களின் அபிவிருத்திப் பயன்பாட்டிற்கெனக் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(10-204)

# மெடி கிளினிக் மானிப்பாய்
## MEDI CLINIC-MANIPAY

Spectaeles Fram's Repairs and Fittings

நீங்கள் உபயோகிக்கும் மூக்குக்கண்ணாடியில் ஏற்படும் சகல பிழைகளையும் திருத்தி சீர்செய்து கொடுக்கப்படும்.

நேரம்: காலை 9.00 மணி தொடக்கம்
பகல் 12.00 மணி வரை (புதன், ஞாயிறு) (41212)(46-43)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 22 | 26 |
| 12 | 12 |
| 1984 | 2004 |

## கடற்புலி வீரவேங்கை கடலறிவன்
(தி.யோகானந்தன்)

அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும் மற்றும் போராளிகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று 26-01-2005 நடைபெறும் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சாரதா வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (41250)(46-43) - குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சுப்பையா யோகலிங்கம்
(காந்தி)



சாவகச்சேரி, கோயிற்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கில் வசித்தவரும் கொற்றாவத்தையை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட சுப்பையா யோகலிங்கம் 21.01.2005 சிவபதமடைந்தார்.

T.C.E.O. பருத்தித்துறையிலும் கமநல சேவை யாழ். திணைக்களத்திலும் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றிய இவர், காலஞ்சென்றவர்களாகிய சுப்பையா - முத்துப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் கொற்றாவத்தை அமரர்களாகிய மலேசியன் பென்சனியர் இளையதம்பி - சரஸ்வதி தம்பதிகளின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சிவகாந்தி (ஜேர்மனி), சிவசீலன் (கனடா), சிவசெல்வி (நியூசிலாந்து), மனோகரன் (கனடா), சிவராணி (கனடா), சிவகரன் (டென்மார்க்), சிவசக்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயகுமார் (ஜேர்மனி), சசீந்தினி (கனடா), இரவிகரன் (நியூசிலாந்து), சாரத்லதா (கனடா), குலசிங்கம் (கனடா), யோகமலர் (டென்மார்க்), பாஸ்கரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமதி செல்லமுத்து குமாரசாமி, திருமதி செல்வதி பரமசிவம், அமரர் சிவஞானசுந்தரம், தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் குமாரசாமி, Dr.பரமசிவம், புவனேஸ்வரி, செல்வராஜா (கனடா), ராஜேஸ்வரி, Dr.கனகரத்தினம், இராதாகிருஸ்ணன், பாலசுப்பிரமணியம் (கனடா), புவனேஸ்வரி, சந்திரவதனா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சோமாஸ்கந்தராசா, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகலனும் பிரகாஷ், சதீஸ், வாரகா, கோகுல், கனிஸ்யா, அனிஸ்யா, லேனுஸ்யா, மதுரா, மோகிதன், திலக்ஷன், பிருந்தா, நிருஷான், கிரிஷான், மதுஷான், மீனுஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வல்வெட்டித்துறை ஊறணி இந்து மயானத்தில் இன்று (26.01.2005) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

கரணவாய் வடக்கு,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை. (41264)(24-11-15)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஒத்துமாறுதல்

வவுனியா வடக்குப் பிரிவில் (கிட்டிய தூரத்தில்) உள்ள மகா வித்தியாலயத்தில் பட்டதாரிப் பயிலுநரான ஆசிரியர் ஒருவர் விஷேடமாகத் தீவுப்பகுதியில் அல்லது யாழ்ப்பாணத்தில் ஆசிரியர் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு: 024 222 3279(41261)

## பதவி வெற்றிடம்

தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கணக்கியல் அறிவு, இரும்பு வியாபாரம் போன்றவற்றில் முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு (1), (2) பதவிகளுக்கு கணனி அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும். அனுபவத்திற்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

(1) கணக்குப் பதியுநர் (2) சிட்டை எழுதுநர்
(3) விற்பனை உதவியாளர்

விளம்பரத் திகதியில் இருந்து 10 நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

யாழ்ப்பாண இரும்பகம்,
32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-40618)

## பத்மா விருந்தினர் விடுதி

இல. 835, நாவலர் வீதி, அரியாலை (கனகரத்தினம் ம.ம.வித்தியாலயத்துக்கு அருகில்) உள்ள மாடி வீடு 25-01-2005 தொடக்கம் விருந்தினர் விடுதியாக இயங்கும் குளியலறை வசதிகளோடு தனியறைகளும் இரண்டு படுக்கையறைகளும் வாடகைக்குண்டு.

தொடர்பு: சிவா
T.P.: 0777 293265 (சி-41237)

## தொலைபேசி இயக்குநர் தேவை

எமது நிலையத்துக்குத் தொலைபேசி இயக்குநர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கணனி அறிவுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தொடர்பு:
லக்கி தொலைத்தொடர்பு நிலையம்
தும்பளை வீதி, பருத்தித்துறை.
T.P.: 021 2263150, 021 2263665 (சி-40606)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| அன்னையின் மடியில் | ஆண்டவன் மடியில் |
|---|---|
| 28 | 26 |
| 11 | 12 |
| 1950 | 2004 |

அமரர்
## பொன்னையா வேலும்மயிலும் (வேலு)
[பாதுகாப்பு உத்தியோகத்தர், இலங்கை வங்கி பருத்தித்துறை]
(Junior Secarity officer Bank of ceylon Point pedro)

நெஞ்சத்து விளக்கு அணைந்து போனதால்
அஞ்சி அஞ்சி தள்ளாடுகிறோம் அப்பா!
பஞ்சடைந்த கண்களால் இன்னும் உங்களையே
கெஞ்சிக் கெஞ்சித் தேடுகிறோம் அப்பா!

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26-01-2005) புதன்கிழமை மதியம் 12மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

ஆத்ம சாந்திக் கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தரக்கம்பரை புலோலி தெற்கு,
புலோலி. (41251)(46-43)

வேலும்மயிலும் குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி





| வீரகத்தி சந்திரவதனா | வீரகத்தி அர்ச்சனா | சின்னையா அன்னமுத்து |
|---|---|---|
| தோற்றம் 04-05-1967 | தோற்றம் 11.02.1999 | தோற்றம் 26.07.1917 |

மறைவு: 26.12.2004

மூத்தவள் நீயிருந்தால் சொர்க்கமே எம்மருகில்
பார்த்திருந்த பாலகர்கள் பாரிலே பரிதவிக்க
சேர்ந்திருந்த சகோதரர்களின் சேவகியாய்த் திகழ்ந்தவளே!
தேற்ற முடியவில்லை சாந்தமுள்ள 'குட்டி'யை இழந்த பின்னர்
அச்சாக்குட்டி உனக்கு இச்சாவு ஏன் வந்தது?
கனவில் கூட நினைக்கவில்லை
- சுனாமிதான் எம்கூட்டை
குலைக்கும் என்று

'நாடி' என்று செல்லமாக சொல்ல நாடிநாடி வருவாயே!
எங்கு சென்றாலும் அம்மாவுடனேயே செல்வாயே!
அதற்காக சாவிலுமா?
தலைமுறைகள் பல கண்டு தளர்நடைபோட
'அம்மா' என்று பிள்ளைகள் அழுதிட
'பெத்தம்மா' என்று பேரப்பிள்ளைகள் வெதும்பிட
'பூட்டா' என்று பூட்டப்பிள்ளைகள் புலம்பிட
கடலாக வந்தானே சதிகாரக் காலன்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மருதங்கேணி வடக்கு, தாழையடி. (41180)(26-43-15) - குடும்பத்தினர்.

கடலலைகள் ஓய்ந்தாலும்
எம் மன அலைகள் ஓய்வதில்லை

# 31 ஆம் நாள் நினைவலைகள்



| மண்ணுலகில் | மண்ணுலகில் |
|---|---|
| 09 | 26 |
| 06 | 01 |
| 1975 | 2004 |

இயேசுவின் பாதங்களில் 26.12.2004

## திருமதி டிலானி ஜெயரஞ்சினி செல்வந்தா
## செல்வன் செ.செல்வந்தா ஆகாஷ்

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
மரித்தாலும் வாழ்வான்"

தென் இந்திய திருச்சபை ஊழியன்,
பெரிய நீலாவணை,
கல்முனை. [41252][39-15-43]

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.

## சர்வதேசப் பத்திரிகையாளர்கள் பலரும் முல்லைத்தீவுக்கு

புதுக்குடியிருப்பு,ஜன.26

சுனாமி பேரலைகளினால் அழிக்கப்பட்ட முலலைத்தீவுப் பிரதேசத்தை சர்வதேச பத்திரிகையாளர்கள் பலரும் பார்வையிட்டுச் செல்கின்றனர்.

இவர்களுள் முல்லைத்தீவு நகரையும் அதனை அண்டிய பகுதிகளையும் பார்வையிடுவதுடன் மக்கள் தற்காலிகமாகத் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களுக்கும் சென்றும் கலந்துரையாடி வருகின்றனர். (எ-353-204)

# நிவாரணப் பணிகளுக்கென கிளிநொச்சிக்கு வாகனங்கள்

## புனர்வாழ்வு அமைச்சு வழங்கியது

கிளிநொச்சி,ஜன.26

சுனாமி அனர்த்த புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு அமைச்சினால் வாகனங்கள் கிளிநொச்சி செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

புனர்நிர்மாணப் பணிக்கென நான்கு இரு சக்கர உழவு இயந்திரங்கள் (லான்மாஸ்ரர்) மற்றும் இரண்டு பிக்கப் வாகனங்களே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றை உத்தியோக பூர்வமாக கையளிக்கும் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் ஆர்.இராசநாயகம் தலைமையில் இடம்பெற்றது.

இரு சக்கர உழவு இயந்திரங்களில் இரண்டு கரைச்சிப் பிரதேச சபைக்கும் இரண்டு கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் -

பிக்கப் வாகனத்தில் ஒன்று பளை பிரதேச செயலர் பணிமனைக்கும் மற்றையது கண்டாவளை பிரதேச செயலர் பணிமனையின் பயன்பாட்டிற்கெனவும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தம் உட்பட பலர் கலந்துகொண்டனர். (த-5-305)

# சுனாமியால் உயிரிழந்த மக்களின் ஆத்மசாந்திக்காக பல்வேறு நிகழ்வுகள்

கிளிநொச்சி,ஜன.26

கடந்த மாதம் 26 ஆம் திகதி சுனாமி அனர்த்தத்தால் உயிரிழந்த மக்களின் ஆத்மசாந்திக்காகவும் பாதிக்கப்பட்ட மக்கள் நலன் பெறவும் பிரார்த்தனைகள் மற்றும் வழிபாடுகள் என்பன இன்று பல்வேறு இடங்களில் நடைபெறவுள்ளன.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, வவுனியா, வடமராட்சி கிழக்கு மற்றும் பாதிப்புற்ற இடங்களில் இந்த நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உயிரிழந்த மக்களை நினைவுகூரும் முகமாக முல்லைத்தீவு நகரில் இன்று இடம்பெறவுள்ள 'எச்சத்திலும் எழுவோம்' என்ற மகுடவாசகத்துடனான நிகழ்வில் பொதுமக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

இன்றைய தினத்தைத் துக்கதினமாக அனுஷ்டிக்குமாறும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிடுமாறும் மக்கள் கேட்கப்பட்டுள்ளனர். சுனாமி அனர்த்தம் நிகழ்ந்த நேரமான காலை 8.50 மணி தொடக்கம் 8.52 வரை உயிரிழந்த மக்களுக்காக அகவணக்கம் செலுத்தப்படும். 8.52 மணி தொடக்கம் 8.55 வரை அனைத்து ஆலயங்களிலும் மணி ஒலி எழுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

இன்று காலை 8.50 மணிக்கு புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் வீதியில் ஐயனார் கோயிலுக்கு அருகில் உயிரிழந்த மக்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் இந்த நிகழ்வுகள் இடம்பெறும்.

வடமராட்சி கிழக்கில் உயிரிழந்த மக்களை அடக்கம் செய்த ஆழியவளை பாடசாலைக்கு அருகிலும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

காலை 8 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட மக்களால் நடத்தப்படும் சர்வமதப் பிரார்த்தனை கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் அரச அதிபர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரார்த்தனைக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இருந்து காலை 9 மணிக்கு அமைதி ஊர்வலம் புறப்பட்டுக் கலாசார மண்டபத்தை அடையவுள்ளது.

வவுனியா நகரசபை மைதானத்தில் மாலை 6 மணிக்கு ஆத்மசாந்திப் பிரார்த்தனை இடம்பெறவுள்ளது. (10)

## பூநகரி ஆசிரியர்களுக்கு சம்பள நிலுவை

முழங்காவில்,ஜன.26

பூநகரிக் கோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்குரிய சம்பள நிலுவைக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

அதேபோல கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களும தமது சம்பள நிலுவைப் பணத்தை பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-5-323)

# முல்லைத்தீவுக்கு 150 கூடாரங்கள் மட்டுமே அரசாங்கத்திடமிருந்து!

முல்லைத்தீவு,ஜன.26

சுனாமியால் வீடுகளையிழந்த முல்லைத்தீவு மக்களுக்கு இடைத்தங்கல் முகாமினை அமைப்பதற்கு 150 கூடாரங்களை அரசு அனுப்பி வைத்துள்ளது.

வெளிநாடுகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான கூடாரங்கள் அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 150 கூடாரங்களே அரசு அனுப்பி வைத்திருப்பது அதிகாரிகள் மத்தியில் அதிருப்தியை உண்டாக்கியிருக்கிறது என்றும் -

முல்லைத்தீவு மாவட்டத்தில் உண்ணாப்புலவு கிராமத்தில் இடைத்தங்கல் முகாம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. கள்ளப்பாடு கிராமத்தில் சுனாமியால் வீடுகளை இழந்த மக்கள் குடியமர்த்தப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-13)

# மன்னார் பிரதேசத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டமைக்கு அறிகுறிகள் இல்லை

## நில இயல் ஆய்வாளர் தெரிவிப்பு

மன்னார்,ஜன.26

மன்னார் பிரதேசத்தில் அண்மையில் நிலநடுக்கம் ஏற்பட்டமைக்கான அறிகுறிகள் ஏதும் இல்லை என்று நில இயல் ஆய்வாளர் சி.எச்.சி. ஆர்.சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் மன்னார் பிரதேசத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் எனினும், அது நிலநடுக்கம்தானா என்று உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் புவியியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

எனவே இது, தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்வதற்கெனக் கொழும்பிலிருந்து வருகை தந்து ஆய்வுகளை மேற்கொண்ட பின்னரே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஆயினும் மன்னார் பிரதேசத்தில் பெரும் மழை ஏற்படும் வேளைகளில் மக்களைக் கவனமாக இருக்குமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

மன்னார், முத்தரிப்புத்துறைப் பகுதியில் ஆய்வுகளை மேற்கொண்டதுடன் பாதிப்படைந்த வீடுகளையும் அவர் பார்வையிட்டார். அதன்பின்னர் கருத்துத் தெரிவித்த அவர் நிலநடுக்கம் ஏற்பட்டதற்கான ஆதாரம் எதுவும் இல்லை எனவும நிலவெடிப்புக்களைப் பார்த்தபோது அவை ஒரே திசையில் ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

நிலத்தின் கீழ் உள்ள மண்ணில் அசைவு அல்லது மாற்றம் ஏற்பட்டதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகவும் சில வேளைகளில் அதிகளவிலான நீர் ஓட்டம் ஏற்பட்டிருக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். எனினும் மக்களை அவதானமாக இருக்குமாறு அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலதிக ஆய்வுகளை மேற்கொள்வதற்காக நிலவெடிப்பு ஏற்பட்ட பகுதியிலுள்ள மண் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. ஆய்வு நடைபெற்றவேளை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோதராதலிங்கம் ஆகியோரும் பிரசன்னமாயிருந்தனர். (10)

# முத்தையன்கட்டு கூட்டுறவுச் சங்கம் நான்கு வருடங்களாக நட்டத்தில்!

ஒட்டுசுட்டான்,ஜன.26

முத்தையன் கட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கடந்த நான்கு வருடங்களாக நட்டத்தில இயங்கிக்கொண்டிருக்கின்றது.

இதனால் சங்கத்தினை இழுத்து மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று முல்லை மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் சிவமயம் தெரிவித்துள்ளார்.

சங்கத்தின் வருடாந்த வரவு-செலவுத் திட்டம் தொடர்பான கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

முத்தையன்கட்டு ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த 2000ஆம் ஆண்டிலிருந்து 2004 வரை 84 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

நான்காண்டில் ஒரு மாதத்தில் மட்டுமே இலாபம் கிடைத்துள்ளது. மூலதனச் செலவுகள் அதிகரித்து வரும் இவ்வேளையில் வருமானச் செலவுகளை ஈடுசெய்ய வியாபாரம் தள்ளாடிக் கொண்டிருக்கின்றது.

இச்சங்கத்திற்கு கடன் எங்கெல்லாம் எடுக்க வேண்டுமோ? அங்கெல்லாம் எடுக்கப்பட்டுள்ளது. இனிமேல் யாரும் தரப்போவதாக இல்லை. இச்சங்கத்தின் நிலை இப்படியே தொடர்ந்தால் மூடுவதைத் தவிர வேறு வழியில்லை - என்றார். (த-13-341)




# வடமராட்சி கிழக்கு மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை

பரந்தன் ஜன.26

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், விடுதலைப் புலிகளும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது உடுத்துறை மகா வித்தியாலயத்தில் 490 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 690 பேரும் -

மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் 675 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்து 375 பேரும் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான தற்காலிக கூடாரங்களை தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமைத்து வருகின்றது. இதன் முதற்கட்டப் பணிகள் உடுத்துறை சுமைதாங்கி என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை -

இங்கு தங்கும் பொது மக்களுக்கான மலசல கூடங்கள் 'ஒக்ஸ்பாம்' நிறுவனத்தின் உதவியுடனும், குடிதண்ணீர் கிணறுகள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் உதவியுடனும் அமைக்கப்படுகின்றன. (த-5-352)

# முழங்காவில் எழுச்சிப் பேரவையினர் பாதிக்கப்பட்டோருக்கு உதவிகள்

முழங்காவில் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் அனுசரணையுடன் முழங்காவில் பிரதேச மக்கள் மற்றும் அப்பகுதி பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கரையோர மக்களுக்கு அவசர மனிதாபிமான உதவிப் பொருள்களை வழங்கியுள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மூலம் இந்த உதவிப் பொருள்கள் உரியவர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது.

இயற்கை அனர்த்தத்தினால் உயிரிழந்த குடும்பங்களுக்கு நிதி உதவியும். காயமடைந்தவர்கள் மற்றும் முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு உலர் உணவுப்பொருள்கள், படுக்கை விரிப்புக்கள், உடுபுடைவைகள் என்பன வழங்கப்பட்டன.

முழங்காவில், கிரிகாலை, நாகபடுவான், பல்லவராயன்கட்டு, ஜெயபுரம் ஆகிய இடங்களிலுள்ள கமக்கார அமைப்புக்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சேமிப்புக் குழுக்கள், வர்த்தக சங்கங்கள, விளையாட்டுக்கழகங்கள் எனப் பல தரப்பினரும் ஒன்றிணைந்தே இப்பொருள்களை முதற்கட்டமாக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திடம் கையளித்துள்ளனர்.

இதன் இரண்டாம் கட்ட நடவடிக்கையாக முழங்காவில் தேசிய எழுச்சிப் பேரவையினர். உணவு, உடை, பணம் என்பவற்றைச் அப்பகுதி மக்களிடம் சேகரித்து வருகின்றனர்.

பூநகரி விளையாட்டு ஒருங்கிணைப்புக் குழுவும் முழங்காவில் பிரதேச அரசியல்துறையினரும் இணைந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கென, சுனாமி காலநிதி உதைபந்தாட்ட போட்டியை நடத்தவுள்ளனர்.

இப்போட்டியில் வடக்கு - கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த அணிகள் பல கலந்துகொள்ளவுள்ளனர்.(த-5-404-ரி)






# "எச்சத்திலும் எழுவோம்" ஆற்றுப்படுத்தல் நிகழ்வு

முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்விமான்களின் ஏற்பாட்டில் சுனாமி பேரலையால் பாதிப்புற்று நிர்க்கதியாய் உள்ள மக்களைத் தேற்றும முகமாக "எச்சத்திலும் எழுவோம்" என்ற தொனிப பொருளில் ஆற்றுப்படுத்தல் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக முல்லை வலயக் கல்விப்பணிப்பாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரலையினால் உயிரிழந்துள்ள மக்களை நினைவு கூறுவதுடன், எஞ்சியுள்ள எமது உறவுகளை ஆறுதல்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழும் வகையில் "எச்சத்திலும் எழுவோம்" என்ற தொனியில் ஆற்றுப்படுத்தல் நிகழ்வினைக் கல்விப் புலம் சார்ந்தோர் ஏற்பாடு செய்துள்ளனர்.

முல்லை மண் மூப்புடைய மண், கல்லும் கடலும் வளங்கள் வாரித்தந்த கடல் மண், பண்டாரவன்னியனுக்கு வீரவரலாறு பதித்த மண் ஓயாத அலையால் வீரம் விளைந்த மண், இந்த மண்ணில் இயற்கையும் போர் புரிந்து விட்டது.

எனினும் இந்த மண் வெட்ட வெட்ட தளைத்த மண் என்பதை நாம் அறிவோம். அறுகம்புல் போன்று அழிந்தாலும் மீண்டும் விளைந்தமையை உணர்வோம். அதுபோலவே சுனாமி அழிவில் இருந்தும் தேசத்தையும், உறவுகளையும் மீட்டிடுவோம் என்றுள்ளது.

இதேவேளை-

முல்லையில் சுனாமி பாதித்த பகுதிகளில் இன்று காலை 8.45 மணியளவில் தேசியக் கொடியேற்றல், இடம்பெற்று பின்னர் இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக சமயப்பிரார்த்தனை இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து சுனாமியின் அவலத்தை வெளிப்படுத்தும் ஆற்றுப்படுத்தல் செயற்பாடு இடம்பெறும். (த-13)

# போரழிவைக் கட்டியெழுப்பிய நாம் பேரழிவில் இருந்தும் மீளுவோம்!

**ந.ரதிக்குமார்**
(யாழ்.பல்கலைக்கழக மாணவன் - வயது 24)



"அண்டைக்கு, உடனடியாக எவ்வளவு சோகமாக நாங்கள் உதவி செய்தமோ, அப்பிடியான உணர்வோட இப்பவும் செய்ய முன்வரவேணும்.

முல்லைத்தீவுப் பக்கமெல்லாம் ஏற்பட்ட அழிவுகளைச் சொல்லி விளங்கப் படுத்த ஏலாது...

இங்குள்ள கழகங்கள், அமைப்புகளிடம் ஆள் உதவியைக் கேட்கலாம். காசு உதவியையும் எமது சமூகத்திலும் புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ளவர்களிடமும் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

அரசு எங்களுக்கெண்டு வாங்கிய உதவியை எங்களுக்குச் செய்யத்தான் வேணும். அது பிந்தியெண்டாலும் தரத்தான் வேணும்..

ஆனா, அதுக்கிடையில் நாங்கள் சனத்துக்கான உளநல ஆற்றுப்படுத்தல்ல இருந்து எல்லாவற்றையும் செய்யவேணும். அரசு உதவிகள் ஒருவேளை வந்தால், அது மேலதிகமாகச் சனத்துக்குக் கிடைக்கட்டும். நாங்கள் எல்லாரும் ஒற்றுமையா, ஓர் ஒழுங்கில செயற்பட்டால் இந்த மீள்கட்டுமானத்தை நாங்களாகவே செய்து முடிக்கலாம் எண்ட நம்பிக்கை எனக்கு இருக்கு....

**பண்டிதர் சி.கார்த்திகேசு**
(சேந்தன் - ஓய்வுபெற்ற ஆசிரியர், வயது -89)

"ஏன் இப்பிடிச் செய்யினம் எண்டு தெரியேல்ல. நாங்கள் நல்லா வந்திடுவம் எண்டு நினைக்கிறாங் களோ என்னவோ தெரியேல்ல...



இவ்வளவு சனங்கள், சொத்துக்கள் அழிஞ்சாப் பிறகும் மனம் மாறேல்லையெண்டால் என்னெண்டு சொல்லிறது. அரச கட்சிகள் எப்பவும் தமிழ்ச் சனங்களுக்கு உதவிகளை செய்யிறதில இழுத்தடிக்கிறது தானே வழமை. இதுக்கு நாங்கள் ஒரு நல்ல வழிமுறையாக, எங்களின்ர வலுவோட நிண்டு, ஒவ்வொருவரும் மனதால உணர்ந்து உதவிகளைச் செய்தால் நிச்சயமாக ஒரு வளர்ச்சி கிடைக்கும். வெளிநாடுகளில இருந்தும் எங்கட சனங்கள் நல்லா உதவி செய்து வருகினம்... இன்றும் இங்குள்ள மக்களும் உதவிகளைச் செய்யினம். இனி, பாதிக்கப்பட்ட சனங்களுக்கு வீடு வாசல், வீட்டுச் பொருள்கள், பிள்ளையளுக்கு உடுப்புகள், பாடசாலை உபகரணங்கள் எண்டு எல்லாப் பக்கத்தாலையும் தேவைகள் இருக்கு. அதெல்லாம் எங்களால செய்யமுடியாத உதவிகள் இல்லை...

சரியான ஒழுங்கமைப்புகள் தேவை...

அதுக்குத்தான் நாங்கள் இப்ப யோசிக்க வேணும். அந்தச் சனத்தின்ர கவலைகள் என்றும் தீராததாகத்தான் இருக்கும். குடும்ப உறவினர்களை, பிள்ளைகளை இழந்திட்டு அதுகள் படுகிற அவதிக்குள்ள இப்பிடியான அரசின்ர சிக்கல்களும் வருகுது....

எனவே, நாங்கள் எல்லா மக்களுமாகச் சேர்ந்து உண்மையாக உதவிகளைச் செய்தால் எங்கட இனம் எங்கட சகோதரர்கள் எண்ட நினைப்போட செய்தால் அதுகளுக்கும் ஆறுதலாக இருக்கும். எங்கட தேசமும் வடிவாகக் கட்டியெழுப்பப்படும். எங்களுக்குள்ளேயே உதவி செய்யும் மனம் எல்லோரிட்டையும் இருக்கு....

**திருமதி நல்லம்மா இராஜமாணிக்கம்**
(குடும்பத் தலைவி, நல்லூர் - வயது 55)

இந்த சுனாமி அனர்த்தம் எத்தனையோ பேரை எண்ணில் அடங்காத ஒரு தொகை மக்களை காவுகொண்டுவிட்டது. அந்த அனர்த்தம் நிகழ்ந்து ஒரு மாதம் முடிவுறும் நிலையில்கூட, எத்தனையோ பேர் தமது உறவுகளை இழந்த துக்கத்திலிருந்தும் அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியில் இருந்தும் மீளாது உள்ளனர்.

அவர்களுக்கு முதலில் உணவு போன்ற உடனடித் தேவைகளைத் தவிர அன்பாக அவர்களுடன் உறவாடக்கூடிய சொந்தங்களே தேவையாகவுள்ளன. அந்த நேரம் பாதிக்கப்பட்டவர்கள்கூட அதைத்தான் தேடுகின்றார்கள்.

பாதிக்கப்பட்டவர்கள் இழந்த சொத்துக்களைப் பற்றித் தற்போது சிந்திக்கவேமாட்டார்கள். தமதுகூட இருந்த உறவுகளைப் பற்றி நினைத்தே ஏங்கிக் கொண்டிருப்பார்கள். அவர்களின் ஏக்கம் முதலில் தீர்க்கப்படவேண்டிய ஒன்றாகவுள்ளது.

எத்தனையோ குழந்தைகள் தமது தாய், தந்தையரை இழந்து நிர்க்கதியாகி இருக்கின்றனர். அவர்களை அரவணைத்து ஆதரவளிக்ககூடிய நிறுவனங்களில் அவர்கள் சேர்க்கப்படவேண்டும். இல்லாவிடின், அந்தப் பிஞ்சுகளின் எதிர்காலம் கேள்விக்குறியானதாகிவிடும்.

இன,மத,பேதமின்றி அனைவருக்கும் உதவி செய்வதே எமது நோக்கமாக இருக்க வேண்டும். எங்கட சகோதரங்கள், எங்கட பிள்ளைகள், எங்கட சொந்தங்கள் என உதவவேண்டும். மனிசருக்கு மனிசர் உதவாமல் இருந்திட்டு கடைசியாக என்னத்தைச் சாதிச்சிட்டுப் போறம். எங்களுக்கும் என்னென்ன நடக்குமோ தெரியாது. நாம் இருக் கும் வரைக்குமாவது அதுகள் வாழுறத்துக்கு உதவவேண்டும் -. என்றார்.

**ம.பேரின்பநாதன்**
(வர்த்தகர் - நல்லூர், வயது - 50)



"வெளிநாட்டு உதவிகள் இலங்கைக்குக் கிடைச்சுக் கொண்டுதானே இருக்கு. ஆனால், தமிழ்ப் பகுதிகளுக்கு அந்த உதவிகள் கிடைக்கேல்ல எண்டு அறியிறம்.... இலங்கைக்கு உதவி செய்கிற நாடுகள், காசு கொடுக்கின்ற அமைப்புக்கள் அரசு சரியா பிரிச்சுக்கொடுக்குதா எண்டத கவனிக்க வேணும்......... அந்தப் பொறுப்பு அவைக்கு இருக்கு. எங்கட சனத்துக்கும் உதவி செய்யவேணும் எண்டது அரசின் கடமை.

வெளிநாட்டு உதவிகளை எங்களுக்கெண்டும்தான் வேண்டினம்.... எனவே, அத கேட்கிறது எங்கட உரிமை...

தரேல்லையெண்டால் நாங்கள் அதுக்காகவும் போராட்டம் நடத்தவேணும்....

அதேநேரம்,

அரசின்ர உதவிகள் கிடைக்குமட்டும் பாதிக்கப்பட்ட சனங்களை இப்பிடியே விடேலாது.... எங்கட வெளிநாட்டு உறவினர்கள் மூலமும் இஞ்ச உள்ள உதவி செய்யக்கூடிய வசதி படைத்தவர்களின் மூலமும் சரியான முறையில் உதவிகளைப் பெற்று, நாங்களும் ஓர் ஒழுங்குமுறையில்-சனங்கள் பழைய மாதிரி இருக்கிறதுக்கான வசதிகளைச் செய்துகொடுக்க வேணும். எல்லோரும் ஒரு கூட்டு முயற்சியா வெளிக்கிட்டா இத இலகுவாச் செய்யலாம் என நினைக்கிறேன்.

**த.ஜெயராஜ்**
(பணிப்பாளர், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், யாழ்.)

இப்ப மூன்று நிலைகளில் உதவி முன்னெடுப்புக்கள் எங்களால் முன்னெடுக்கப்படுகின்றன. அரசின் உதவிகள் வெறும் பேச்சளவிலேயே உள்ளன. முற்றாக அரசு கைவிடுமாக இருந்தால் T.R.O. முழு உதவிகளையும் செய்யக்கூடிய வலு 'வோடு தான் உள்ளது. இன்று முழு உலகமுமே எமது நேர்மையான செயற்பாட்டைக் கண்டுள்ளது.



அரசு இப்போது உதவுமா? உதவாதா? என்ற தெளிவான முடிவை எடுக்க முடியாதபடி சமாளித்துப் பதில் கூறி வருகிறது. இந்நிலையிலும் நாம் எம்மாலான நல்ல திட்டமிடல்களை மற்றைய நிறுவனங்களையும் ஒருங்கிணைத்துச் செயற்படுத்தி வருகிறோம்.

வெளிநாடுகளில் உள்ள எமது உறவினர்கள், நலன்விரும்பிகள் மற்றும் உள்ளூர் பிரமுகர்களின் உதவியுடன் எங்களால் இதனைச் செய்யமுடியும்.

**தர்மராஜா சிறிகாந்தன்**
(ஓட்டோச் சாரதி, கோண்டாவில் சந்தி)

எங்கட அக்கா, தங்கச்சிக்கு ஒண்டெண்டா நாங்கள்தானே எப்பிடியும் உதவி செய்யிறம்.. அதுபோல இதிலவும் நாங்கள் செயற்படவேணும்.. எவ்வளவு கஷ்டப்பட்டாலும் நாங்கள் செய்யலாம். மனம் தான் முக்கியம். செய்கிறது எண்டால் வடிவாச் செய்யலாம்.



அரச உதவிகள் எப்பதான் ஒழுங்காக் கிடைச்சது? அது வாற நேரம் வரட்டும். சிலவேளை அது வராமலும் போகலாம்.

ஆனா வெளிநாட்டு உதவிகள் இங்கு கிடைக்கேல எண்டு நாங்கள் வெளிநாடுகளுக்குத் தெரியப்படுத்தவேணும். அதவிட எங்கட சனத்தை நாங்கள் தான பாதுகாக்க வேணும். சகோதர மனப்பான்மையோட செயற்படவேணும். சரியாகக் கஷ்டப்பட்ட ஒரு அம்மா அண்டைக்கு இந்தப் பாதிக்கப்பட்ட சனங்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்ததைக் கண்டனான்.

உண்மையில மனமிருந்தா வடிவாச் செய்யலாம். எவ்வளவு அழிவுகளை பட்டிட்டம். இதில இருந்து சனத்தைத் திரும்பவும் அவையின்ர இடத்தில இருக்க உதவிசெய்யவேணும்.

நீங்கள் என்ன உதவியெண்டாலும் எங்கட ஸ்ராண்ட்க்கு வாங்கோ. நாங்கள், எங்கட பெடியள் செய்வாங்கள்.

## எப்படிச் செய்யலாம் என்று இவர்களைக் கேட்டோம்...

**அருட்தந்தை ஜெயக்குமார்**
(கியூடெக் நிறுவன இயக்குநர்)

இன்று உடனடித் தேவைகளை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கி வருகின்றோம். உதாரணமாக உள ரீதியாக மிகப் பாதிப்பையடைந்துள்ள சிறுவர்களை ஆற்றுப்படுத்துவதற்காக விளையாட்டுக்கள், வகுப்புகள் என்பவற்றை நடத்துகின்றோம். பிள்ளைகளுக்கு வேண்டிய சீருடைகளையும் தைத்துக் கொடுகின்றோம்.

இவ்வாறு இந்த உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதன் மூலம் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் மாற்றம் பெறாது.

இயற்கை அனர்த்தம் ஏற்பட்டவுடன் அனைவரும் உதவி செய்யும் உணர்வலையால் உந்தப்பட்டு உதவி வழங்க முன்வந்தனர். உடனடி உதவிகளைச் செய்தவர்கள் அந்த மக்களின் எதிர்கால வாழ்வைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டும்.

பெற்றோரை இழந்த பிள்ளைகளின் நலன்கருதி சிறுவர் நல காப்பு என்னும் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இத் திட்டத்தின் மூலம் அப்பிள்ளைகளைக் காப்பகங்களில் தங்க வைப்பதுடன் பிள்ளைகளுக்கு மாதம் 2 ஆயிரம் ரூபா வீதம் வழங்கவுள்ளோம்.

இப்படியான காப்புறுதித் திட்டங்களை நலன் விரும்பிகள் தொடங்குவதுடன் அவ்வாறான திட்டங்களுக்குத் தங்களாலான ஆதரவையும் வழங்கலாம்.

சுனாமியால் பாடசாலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன எனவே, இனிவரும் காலங்களில் கரையோரங்களில் அமைக்கப்படும் பாடசாலைகள் கட்டாயமாக மாடிக்கட்டடங்களாக அமைக்கப்பட்டு மேல் தளங்களிலேயே வகுப்புகள் நடத்தப்படவேண்டும்.

நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான கல்வியை வழங்கி, ஒவ்வொருவரும் அனர்த்த காலத்தில் எவ்வாறு தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம், அனர்த்த கால களநிலையை எவ்வாறு எதிர்கொள்வது போன்ற அறிவை வழங்கவேண்டும்.

அத்தோடு, அனர்த்த முகாமைத்துவக் கல்வி மாணவர்களுக்கு மட்டும் வழங்காது சமூக ரீதியாகப் பெரியோர்களுக்கு கற்றுக் கொடுத்தல் எல்லோரையும் அனர்த்தகாலங்களில் பாதுகாத்துக் கொள்வதற்குத் துணிபுரியும்.

**ந.சத்தியபாலன்**
( ஆசிரியர், எழுத்தாளர் - வயது)

சுனாமி எங்களுக்கும் புதிசு அரசிற்கும் சு ஆனால்.



அரசின் உதவிகளில் தமிழர்கள் புறணிக்கப்படுதென்பது எமக்கு புதியதொரு விடயமல்ல. இந்தச் சுனாமியை அரசு தனக்கும் தனது அரசியல் நலனுக்கும் ஒரு வாய்ப்பாக பயன்படுத்த நினைக்கிறது. உண்மையில பாதிக்கப்பட்ட சனங்களின் நிலை மிகவும் சோகமானது.

ஒரு தாய் தன் நான்கு பிள்ளைகளுக்கும் பிண்டம் போட்டதாக அறிந்தேன். அப்படி ஊட்டி வளர்த்த கைகளாலேயே நான்கு பிள்ளையளுக்கும் ஒரேயடியாய் மரணக் கிரியைகளைச் செய்கின்றபோது அம்மனம் எப்படி இருந்திக்கும்

பெரும் சோகம்.... இந்தச் சோகத்திலிருந்து மீண்டு அவர்களைக் கட்டியெழுப்ப வேண்டும்.

அவர்கள் மீள வேண்டும்.

அதற்காக அரசின் உதவிகளை எதிர்ந்திருக்குமளவிற்கு எமக்கான நேரம் போதாது.

அதனால்,எமது சமூகமே இந்தக் கட்டுமாணிகளுக்காக இணைய வேண்டும். அதற்கான அடித்தளங்கள் போடப்பட்டு விட்டதாகத்தானே அறிகிறோம்.

அந்த முயற்சிகளுக்கு மேலும் நாம் கைகொடுத்து முடியுமானவரை பலமாக இருக்க வேண்டும். ஆடம்பரச் செலவுகள், களியாட்டங்களில் செலவிடும் பணத்தைச் சேமிக்கமுடியும். அத்தகைய நிறுவனங்களிடம் இருந்து சிறுதொகைப் பெற்றுக்கொள்ளமுடியும். கலை நிகழ்வுகளின் மூலமாக பணத்தைச் சேகரிக்கலாம். இப்படி நிறைய வழிகள் உந்.

**டாக்டர் சிவசங்கர்**
(உளவளத்துணையாளர்)

பாதிக்கப்பட்ட மக்களின் உண்மையான உந்து உணர்வுகள் காலம் தாழ்த்தியே வெளிவர [illegible] அவர்கள் மீளவும் சாதாரண வாழ்க்கைக்குச் செல்லும்போ [illegible] அவர்களது உள்ளக் கிடக்கைகள் வெளிவரும். அந்த நேரில் அவற்றைக் கையாண்டு சிகிச்சையளிக்க உளவளத்துணையாளர்களின் சிகிச்சைகள் அவசியம்.

பழைய சம்பவங்கள் அவர்களுக்கு நிவிற்கு வரும்போது அவர்களிடையே குற்றப்பழியுணர்வு ஏற்படும். தமது உறவுகளை, பிள்ளைகளைத் தம்மால் காப்றமுடியவில்லையே என்ற பழியுணர்வைத் தாமே நினைக் கொண்டு சோர்ந்து போய்விடுவார்கள்.

நாம் அவர்களுக்கு அனர்த்தம் ஏற்பட்டது பற்றிய பூரண விளக்கத்தைக் கொடுத்து அவர்களிடம் தவறேல்லை என்று புதுத்தெம்பை ஊட்டுதல் வேண்டும்.

கடற்கரையோரங்களில் கடற்றொழிலைமேபி வாழ்ந்த எத்தனையோ உறவுகள் தாம் மீண்டும் அந்தொழிலைத் தொடர்ந்து செய்வதற்குப் பின்நிற்கும் சிக்கள்கூட ஏற்படலாம். அவர்களுக்குக் கடலில் நம்பிக்கைன்மை பயம் போன்றன ஏற்படலாம்.

பாதிக்கப்பட்ட மக்கள் எந்தநிலையில் உள்ளார்களோ அவர்களின் நிலைக்குச் சென்று தேவையைகேட்டறிந்து உதவுதல் வேண்டும். அத்துடன், உளவள ரீதிப் பாதிக்கப்பட்டவர்கள் டாக்டர்களிடம் நேரடியாகச் செ தமக்குரிய சிகிச்சைகளைப் பெறவேண்டும். அவர்களிடம்ற உணர்வுகள் காணப்பட்டால் அது மாற்றப்படவேண்டும்வை தொடர்பான ஆலோசனைகளை பெறக்கூடிய [illegible] உள்ளன என்பதைப் பாதிக்கப்பட்ட மக்கள் [illegible]. அவற்றை நாடி உள்ளத்தில் அடங்கியுள்ள பயர்வுகளைத் தெரிவித்து அதற்கான உளச் சிகிச்சைகளைப்பெறவேண்டும்.

எவ்வளவு விரைவாக நெருக்கடிகளில்ருந்து மீள முடியுமோ அவ்வளவு விரைவாக மீள முற்படவேண்டும்.

அத்துடன், நாம் அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதோடு, அவர்க்கு வீடுகளுக்குள் அறைகள் இருப்பதுபோன்று வசத் வீடமைத்துக் கொடுத்தல் வேண்டும்.

சாதாரணமாக அவர்கள் ஒரு கூட்டுக் குமாக வாழ முடியாது என்று தெரிந்து கொண்டு அவர்கு இருப்பிட உதவிகளை வழங்க முன்வரவேண்டும்.

**அ.ந.செல்வரத்தினம்** (நல்லூர் - நு-55)

வரலாறு காணாத அழிவைச் சந்தித்துள்மது உறவுகளின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப நாம் எரும் செயறபடவேண்டும்.

இந்த நிலையில் நாம் அரசின் உதவியை எத்திருக்க முடியாது? ஏனெனில் இந்த அரசு இவ்வளவழிவில்கூட தனது பாரபட்சத்தைக் காட்டிவருகின்றது. இதக்கு மென் மேலும் வேதனை தருகின்ற விடயம். எந்தரு கோபக்கார்களும் செத்த வீட்டில் தான் ஒன்று சேர்கள்..

ஆனால் இந்த அரசு இன்னும் மனம் மாறேல. உதவியென்று சொல்லி எமக்கு சலுகைகளைத் [illegible] எம்மிடம் வேறொன்றை எதிர்பார்ப்பவர்களும் இருப்பா. அதற்கு இடம் கொடுக்காமல் எமது தனித்துவத்தை [illegible] வேண்டும்.

**கோரம் மிக சுனா**
**கொடுமைகள் இரு**

ம்!

வக் கற்றலை மாணவர்க
கப் பெரியோர்களுக்கும்
அனர்த்த காலங்களில்
புரியும்.
ன்
வயது 49)
ற்கும் புதிசு ஆனால்....
ர் புறக்கணிக்கப்படுவ



து அவள் மனம் எப்படி

கத்திலிருந்து மீண்டும்
ம்.

எதிர்பார்த்திருக்குமள

டுமானப் பணிகளுக்காக
ளங்கள் இங்கு போடப்
ம்.
கைகொடுத்து முடியும்
ம்பரச் செலவுகள், களி
சேமிக்கமுடியும். அத்
தொகையைப் பெற்றுக்
லமாகவும் பணத்தைச்
ள் உண்டு.
கர்
ளர்)
ன உள்ளத்து உணர்வு
ப்புண்டு. ர்கள்
போதே களது
ந்த நேரங்களில் அவற்
ளவளத்துணையாளர்

கு நினைவிற்கு வரும்
ர்வு தோன்றும். தமது
காப்பாற்றமுடியவில்
நினைத்துக் கொண்டு

டது தொடர்பான பூரண
தவறேதுமில்லை என்று

லையே நம்பி வாழ்ந்த
அந்தத் தொழிலைத்
சிக்கல்கள்கூட ஏற்
பிக்கையின்மை பயம்

யில் உள்ளார்களோ
வையைக் கேட்டறிந்து
ள ரீதியாகப் பாதிக்கப்
ச் சென்று தமக்குரிய
ளிடம் குற்ற உணர்வு
ண்டும். அவை தொடர்
ழக்கள் கள்
ள் மறக்கக்கூடாது.
ள பழியுணர்வுகளைத்
ளைப் பெறவேண்டும்.
ளில் இருந்து மீள
முற்படவேண்டும்.
வையான அத்தியாவ
அவர்களுக்கு வீடுக
வசதியாக வீடமைத்

க் குடும்பமாக வாழ
வர்களுக்கு இருப்பிட

ர் - வயது-55)
துள்ள எமது உறவு
ம் எல்லோரும் செயற

யை எதிர்பார்த்திருக்க
ளவு பேரழிவில்கூட
. இது எமக்கு மென்
எந்தவொரு கோபக்
சேருவார்கள்..
மாறேல்லை. உதவி
த் தந்து எம்மிடம்
ப்பார்கள். அதற்கு
தை பேணவேண்டும்.

மிக்க சுனாமி தந்த
களில் இருந்து மீள்வதற்கு...

# இடர்களை மறந்து மீண்டும் கடலுக்குப் புறப்படுவோம்...

நேற்றுப் போல் இருக்கிறது....

அதற்குள் ஒரு மாதம் அடிபட்டுப் போய் விட்டது.

அகங்காரம் கொண்டு எங்கள் ஊர்களை அழித்த ஆவணக் கடலுக்கு வயது ஒரு மாதம்.

தங்களின் உயிரிலும் மேலாக கடலை உயர்வாகப் பார்த்த மக்களுக்கு அவர்கள் சற்றும் எதிர்பாராதவிதமாக கடல் துரோகம் இழைத்து ஒருமாதம் கடந்துவிட்டது.

இனியென்ன எல்லாம் ஒரு நொடிப் பொழுதில் நடந்து முடிந்துவிட்டது. திரும்பத் திரும்ப அதையே நினைத்துக் கொண்டிருக்காமல் மீண்டும் உயிர்ப்புப் பெற்று எழுவதற்கு என்ன செய்யப் போகிறோம் என்பது தான் இன்றுள்ள விடயம்.

இலங்கை பூராகவும் சுமார் 35 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் சுனாமி அனர்த்தத்துக்கு பலியாகியிருக்கிறார்கள். காணாமற்போனரதும் காயமடைந்தோரினதும் தொகை மேலும் பல்லாயிரம்.

உடுத்திருந்த துணிகளைத் தவிர ஏனைய யாவற்றையும் இழந்துவிட்டு எதிர்காலம் நோக்கிய சூனியப் பார்வையுடன் இடிந்து போயிருக்கும் மக்களின் எண்ணிக்கை இலட்சங்கள்.

இந்த மக்கள் இனி என்ன செய்யப்போகிறார்கள். எப்படி வாழப்போகிறார்கள். அவர்களுக்கு எப்படிக் கைகொடுத்து எழவைப்பது என்பது பற்றிச் சிந்திக்க வேண்டிய பொறுப்பு அரசினது மட்டுமல்ல, ஒட்டுமொத்த நாட்டு மக்களினதும் கடமை - பொறுப்பு.

தமிழர் வரலாற்றில் அனர்த்தங்களும் அழிவுகளும் புதியவையல்ல. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டே காலத்துக்குக் காலம் பல்வேறு அழிவுகளைத் தமிழினம் சந்தித்து வந்திருக்கிறது.

கடல் கொண்ட தென்னாடு, கடல்கொண்ட குமரிக் கண்டம் என்றெல்லாம் பழைய இலக்கியங்களில் வருகின்ற குறிப்புகள் தமிழகத்திலே தமிழர் இராச்சியங்களும் நாகரிகங்களும் அவ்வப்போது கடல்கோளினால் காவுகொள்ளப்பட்ட வரலாற்றை எமக்குக் காட்டுகின்றன. அவ்வாறு கடலினால் பல தட்வைகள் காவுகொள்ளப்பட்ட தமிழினம் சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவை போல மீண்டும் உயிர்பெற்றெழுந்து புதுமைகள் படைத்து உயர்வடைந்த வரலாறும் பழமையானது; வழமையானது.

தமிழினத்தின் இத்தகைய அழிவுக்குப் பிந்திய எழுச்சி தமிழகத்தின் பழைய வரலாறுகளில் மட்டுமல்ல ஈழத்தின் புதிய வரலாறுகளிலும் கண்கூடு.

20 வருடங்களாக நடைபெற்ற கொடிய - வலிய யுத்தத்தின் தாக்கங்களையும் வலிகளையும் தமது முதுகிலே சுமந்து தள்ளாடிய ஈழத்தமிழர்கள் கடந்த இரண்டு வருட அமைதி நாள்களில் ஓரளவுக்கு முதுகு நிமிர்த்தி எழுந்திருக்கிறார்கள் என்ற செய்தி இதற்கு கட்டியம் கூறும்.

இத்தகைய வரலாறு கொண்ட மக்களுக்கு சுனாமியின் தாக்கத்திலிருந்து மீள்வதென்பது ஒரு பெரிய விடயமல்ல. இத்தனையையும் இழந்த பிறகும் மீண்டும் முன்னரைப் போல - முன்னரைவிட அதிகவீச்சுடன் எழுவதற்கு அவர்களால் முடியும்.

ஆனாலும் வீழ்ந்து கிடக்கும் மக்களைக் கைகொடுத்து தூக்கிவிட வேண்டிய கடப்பாடும் தேவையும் எங்கள் அனைவரிடமும் இருக்கிறது.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவுகின்ற விடயத்தில் வழக்கம்போல இந்தத் தடவையும் அரசும் பேரினவாத சக்திகளும் தங்களின் சுயரூபத்தை வெளிப்படுத்திக் காட்டியிருக்கின்றார்கள்.

உடனடி உதவிகளில் பாராமுகமும், மீட்புப் பணிகள், மீள்வாழ்வுச் செயற்பாடுகள் என்று அனைத்திலுமே அக்கறையீனம்.

பாதிக்கப்பட்ட சிங்கள தேசத்துக்கு வரிந்து கட்டிக் கொண்டு அடிப்படை உதவிகளையும் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுகின்ற அரசு, தமிழர் பகுதிகளுக்கு வெறுமனே கிள்ளித்தெளித்துவிட்டு வாழாவிருக்கின்றது.

அனர்த்தம் நடைபெற்று இன்றுடன் ஒரு மாதம் கடக்கிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரக்கணக்கில் உயிரழிவு, உடைமை இழப்பும் ஏற்பட்டு பல்லாயிரம் குடும்பங்கள் நிர்க்கதியாகியிருக்கின்றன என்பது சர்வதேசத்திற்கே தெரிந்த உண்மை

ஒருமாத காலமாக பாடசாலைகளில் தங்கியிருகின்ற அந்த மக்களை வேறு இடங்களில் தற்காலிகமாகவேனும் குடியமர்த்த வேண்டும் என்ற சிந்தனையே அரசுக்கு ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

ஆனால், இத்தனை நாள்ளுக்குப் பிறகு இப்போதுதான் அங்கு 150 கூடாரங்கள் அரசினால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நிர்க்கதியாகி நிற்கின்ற முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வெறுமனே 150 கூடாரங்களை அனுப்பிவைப்பது 'யானைப் பசிக்கு சோளன் பொரி' போட்டது... போலத்தான் இருக்கும்.

அரசின் பாராமுகத்துக்கு இது ஒரு சிறு எடுத்துக்காட்டு.

இதேநிலைதான் ஒட்டுமொத்த தமிழ்ப் பகுதிகளுக்கும். ஆனால், சிங்கள தேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர இருப்பிடங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளே முழுவீச்சில் தொடங்கிவிட்டன என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். சர்வதேசத்தினால் வழங்கப்படுகின்ற உதவிகள் அனைத்தும் தமிழர் பகுதிகளுக்கும் சமமாகப் பகிரப்பட வேண்டும் என்ற குரல் பல்வேறு முனைகளிலிருந்தும் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியிருக்கின்ற இந்த நேரத்தில், தாங்கள் தமிழர் பகுதிகளுக்கும் எந்தவித வேறுபாடுகளும் காட்டாமல் உதவுகின்றோம் என்று சர்வசேத்துக்குப் 'பூச்சாண்டி' காட்டுவதற்காக அரசு அவ்வப்போது சிறுசிறு உதவிகளை தமிழர் தாயகத்துக்கு வழங்கிகொண்டிருக்கின்றது. அவ்வளவு தான்.

அரசின் இத்தகைய செயற்பாடுகள் வழமையானவையே என்பதால் அதைப் பற்றி அடிக்கடி குறைகூறிக்கொண்டு குத்திக்காட்டிக்கொண்டு இருக்காமல் எம்கையே எமக்கு உதவி என்பது போல எங்களது மக்களை நாங்களே மீட்டெடுக்கவேண்டிய தேவை தமிழர்கள் அனைவருக்கும் இருக்கிறது.

கடந்த ஒருமாதமாக நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கின்ற மக்களுக்கு ஏராளம் பிரச்சினைகள் இருக்கின்றன. வெளிப்படையான பிரச்சினைகளுக்கு அவ்வப்போது இயலுமான தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டு வருகின்றபோதிலும் உள்ளார்ந்த ரீதியாக அவர்களின் பிரச்சினைகள் முற்று முழுதாகத் தீர்த்தபாடில்லை.

## சுனாமி அழிவைவிட கொடியது தொற்று நோய்

இதற்கு முன்னர், கடற்கொந்தளிப்பு, பூகம்பம், நிலநடுக்கம் என்று இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்ற நாடுகளில் எல்லாம் அழிவுக்குப் பின்னர் ஏற்படுகின்ற தொற்று நோய்களால் மேலும் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருக்கின்றன. உலக அனுபவங்களைப் பாடமாக எடுத்துக்கொண்டு விழிப்படையவேண்டியது அவசியம்.

எனவே, பாதிக்கப்பட்ட மக்களைத் தொற்றுநோய்கள் ஏதும் அணுகாத வண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டிய அவசியமாகும்.

இந்த விடயத்தில் தமிழீழச் சுகாதார சேவையினரும் ஏனைய சுகாதாரப் பிரிவினரும் ஏனைய சுகாதாரத்துறை சார் தரப்பினரும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். எனினும், நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கு சுகாதார நடவடிக்கைகள் தொடர்பாக விழிப்புணர்வும் விளக்கமும் அளிக்கப்படவேண்டும்.

பாடசாலைகளில் தங்கியிருக்கின்ற மக்கள் இன்னும் சில தினங்களில் அங்கிருந்து தற்காலிக கூடாரங்களுக்கு மாற்றப்பட்டிருக்கின்றார்கள். அங்கும் மலசலகூடங்கள் மற்றும் குடிதண்ணீர் போன்ற, சுகாதாரத்துடன் நெருங்கிய தொடர்படைய வசதிகள் பொதுமைப்படுத்தப்பட்டதாகவே அமைக்கப்படுகின்றன. இதனால் அங்கும் கூட சுகாதார நெருக்கடிகள் தலைதூக்கலாம்.

## இயலுமானால் நீங்கள் இப்படியும் உதவலாம்

எனவே, அதனைத் தடுப்பதற்கு மாணவர்கள், புத்திஜீவிகள் அனைவரும் முன்வந்து உதவவேண்டும்.

சுனாமி எங்களது மக்களை அழித்துவிட்டது என்ற செய்தி வெளியானதுதான். தாமதம் நாட்டின் அனைத்து மக்களும் தங்களுக்கு பாதிப்பு நிகழ்ந்ததுபோல் கருதிக் கொண்டு தங்களால் இயன்ற சகல உதவிகளையும் வழங்கினார்கள்.

மனித சமுதாயத்தில் மரத்துப்போயிருந்த மனித நேயம் மீண்டும் உயிர்பெற்று எழுந்திருக்கிறது. என்றுமே இல்லாத வகையில் மக்கள் தமது உச்சக்கட்டமான உதவி மனப்பான்மையை வெளிக்காட்டியிருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உதவிப் பொருள்களையும் வேறு சேவைகளையும் வழங்கிவருகின்றார்கள்.

வெளிநாட்டு அமைப்புக்களால் அடிக்கடி மருத்துவ முகாம்களும் அங்கு நடத்தப்படுகின்றன. இந்தச் சந்தப்பங்களில் வெளிநாட்டுப் பிரமுகர்களும், மருத்துவர் களும் மக்களுடன் உரையாடுவதற்கு மொழிப்பிரச்சினை பெரிதும் தடையாக இருக்கிறது.

வெளிநாட்டவர்களுடன் ஒருசில மொழிபெயர்ப்பாளர்கள் வருகைதந்தாலும் மொழிபெயர்ப்பில் நெருக்கடிநிலை தொடர்ந்தும் நிலவுவதை அவதானிக்கமுடிகிறது.

எனவே ஆங்கிலம் தெரிந்தவர்கள்- மொழிபெயர்ப்புத் துறையில் அனுபவம் உள்ளவர்கள் நலன்புரி நிலையங்களுக்குச் சென்று வெளிநாட்டுக் குழுக்களுக்கும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கும் இடையில் மொழிபெயர்ப்பாளர்களாக செயற்பட்டால் அது அந்த மக்களுக்கு மிகவும் சிறந்த உதவியாக அமையும்.

## மருத்துவத் துறையில் மாற்றங்கள் அவசியம்

சுனாமி அனர்த்த காலத்தில் மருத்துவத்துறையும் தனது உச்சக் கட்டப் பணிகளை செவ்வனே செய்திருக்கிறது.

இருந்தாலும் நாட்டில் நிலவி வருகின்ற மருத்துவர்களின் பற்றாக்குறையினையும் மருத்துவத்துறை மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியதன் அவசியத்தையும் சுனாமி சுட்டிக்காட்டியிருக்கிறது என்பது மறக்க முடியாதது. காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு மருத்துவர்களும் மருத்துவ பீட மாணவர்களும் தங்களை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றயிருந்தாலும் அவர்களின் சக்திக்கு அப்பாற்பட்ட சில காரணங்களினால் காயமடைந்தவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருக்கின்றார்கள்.

இதனைவிட சுனாமி அனர்த்தத்தின்போது நாடு முழுவதிலும் 40 வைத்தியர்கள் உயிரிழந்திருக்கின்றார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதனால், மருத்துவத்துறை எதிர்காலத்தில் மேலும் நெருக்கடிகளைச் சந்திக்கவிருக்கும் சாத்தியம் இருக்கிறது.

இந்த விடயங்கள் ஒருபுறமிருக்க - இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்கள் திருட்டு, பாலியல் வல்லுறவு, துஷ்பிரயோகம் போன்ற பல்வேறு சட்டமீறல் சம்பவங்களுக்கும் முகம்கொடுத்து வருகின்றார்கள். இத்தகைய சம்பவங்கள் தென்னிலங்கையில் அதிகமாக இடம்பெறுகின்றதென்று செய்திகள் அடிக்கடி வெளியாகின்றன. ஆனால், வடக்கு - கிழக்கில் அத்தகைய சம்பவங்கள் பெரிதாக இடம்பெறவில்லை. இருந்தாலும் இது விடயத்தில் இங்கும் அவதானமாக இருக்கவேண்டியது அவசியம்.

வடக்கு - கிழக்கில் நலன்புரி நிலையங்களைப் பராமரிக்கின்ற தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற தரப்பினர் சற்று அவதானமாக இருந்து சட்ட மீறல்கள் இங்கும் தலை தூக்காமல் தொடர்ந்தும் அவதானிக்க வேண்டும்.

இயற்கை இன, மத, பேதங்கள் பார்ப்பதில்லை. அதனால்தான் அது எல்லா இனமக்களையும் எல்லா மதத்தவர்களையும் ஒரே தரத்தில் - ஒரே அளவில் பாதித்திருக்கிறது. எனவே, இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளும் இனமத பேதங்களுக்கு அப்பால் அமைய வேண்டும்.

தென்னிலங்கையிலுள்ள சிங்கள மக்களில் பலர் மலையகத் தோட்டத் தொழிலாளர்களை தீண்டத்தகாதவர்கள் போலப் பார்ப்பதும் இவர்கள் மீது இனவாதத் தாக்குதல்களை அவ்வப்போது கட்டவிழ்த்து வருவதும் அனைவரும் அறிந்த விடயம்.

ஆனால், இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தங்களால் இயன்ற உச்சக் கட்ட உதவிகளை உடனடியாகவே செய்துமுடித்திருக்கிறார்கள்.

சமைத்த உணவு தொடக்கம் தாங்கள் பாவித்த உடைகள் வரை கொடுத்து உதவிய அவர்களின் மனித நேயப் பண்பு மதிக்கத்தக்கது.

ஆனால், இதனைக்கூட உணர்ந்துகொள்ள மறுக்கின்ற சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகள் சிலர் இன்னமும் திருந்தாதிருப்பதுதான் வேதனை தருகின்ற விடயம்.

முன்னெப்போதும் இல்லாதவாறு இலங்கைக்கு இப்போது வெளிநாட்டு உதவிகள் வந்து குவிகின்றன. இலங்கை அரசு தனது உதவிகளில்தான் தமிழர் தாயகத்தைப் புறக்கணித்துவிட்டது. இப்போது பாதிக்கப்பட்ட ஒட்டுமொத்த மக்களுக்கும் என்று வெளிநாடுகள் வழங்குகின்ற உதவிகளாவது நியாயமான முறையில் பங்கிடப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள்.

இந்த விடயத்தில் அரசு மீது தமிழ்மக்களுக்கு இம்மியளவும் நம்பிக்கையில்லை. எனவே தமிழர் பகுதிகளுக்கும் உதவிகள் சரிசமமாகப் பகிரப்படவேண்டும் என்பதை வெளிநாட்டுகள் நேரடியாகக் கண்காணிக்க வேண்டும் - நெறிப்படுத்தவேண்டும்.

எவரும் எதிர்பாராத விதமாக பேரனர்த்தம் ஒன்று நடந்து முடிந்துவிட்டது. ஆனால், இதுபோன்ற அழிவுகள் இனி ஒருபோதும் நடந்துவிடாமல் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய தேவை மக்களுக்கும் - பாதுகாப்பு முன்னேற்பாடுகளைச் செய்யவேண்டிய அவசியம் ஆளும் தரப்பினருக்கும் இருக்கிறது.

கரையோரப் பகுதிகளில் குடியேற்றங்களை முன்னர் நிர்மாணிக்கும்போது உரிய முறையில் திட்டமிடப்படவில்லை என்று கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அண்மையில் குற்றச்சாட்டியிருந்தார். இதுபோன்ற திட்டமிடல் சம்பந்தமான குறைபாடுகள் வேறு சில தரப்பினராலும் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இவற்றைக் கருத்திற்கொண்டு இனிமேலாவது கடற்கரையோரக் குடியேற்றங்கள் உரிய நிபுணர்களின் ஆலோசனைப்படி திட்டமிடப்படவேண்டும்

பேரிடர் முகாமைத்துவத்தில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களை வெளிநாடுகளில் இருந்து வரவழைத்து அதற்கான திட்டங்களை அரசு செயற்படுத்த வேண்டும்.

பிரதான கரையோரங்களில் சுனாமி எச்சரிக்கை குறியீட்டுச் சாதனங்கள் அமைக்கப்படவேண்டியதன் அவசியமும் இப்போது உணரப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அந்தளவுக்கு விஞ்ஞான ரீதியான வளங்களை நிறுவுவதற்குரிய வசதிகள் இலங்கை அரசிடம் இல்லை என்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதே.

இதற்காக, ஆசியாவில் பலம் வாய்ந்த - விஞ்ஞான ரீதியில் முன்னேறிய ஜப்பான், இந்தியா போன்ற நாடுகளிடம் இலங்கை அரசு உதவிகளைக் கேட்டுப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கலாம்.

உள்நாட்டில் யுத்தம் நடைபெறுகின்றபோது தனது படைகளைப் பாதுகாப்பதற்காக பதறியடித்தக்கொண்டு வெளிநாடுகளிடம் இராணுவ சாதனங்களையும் படைக்கலங்களையும் பெற்றுக்கொள்கின்ற அரசு இத்தகைய தொகு பேரனர்த்தத்திலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக வெளிநாடுகளிடமிருந்து நவீன விஞ்ஞான சாதனங்களைப் பெறுவதற்கு எந்தவகையிலும் தாமதிக்ககூடாது என்று கல்விமான்கள் பலரும் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

கட்டுரை: அற்புதன்
கருத்தறிந்தவர்கள்: சிவசைலஜா, தீபா, கங்கா, கவி

SCC விசேட கணனிப் பயிற்சி நெறிகள்
அனைத்துப் பயிற்சி நெறிகளிற்கும் 50% கட்டணச் சலுகை

DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE 2003 — Duration 5 Months — Course Fees Rs. 875/=
• Fundamentals of Information Technology • Outlook • Word • Excel • MS Money • Access • Power Point • Internet, E-mail

DIPLOMA IN DESKTOP PUBLISHING — Duration 4 Months — Course Fees Rs. 1375/=
• Word • Power Point • Pagemaker • Corel Draw • Photoshop

DIPLOMA IN COMPUTER PROGRAMMING — Duration 8 Months — Course Fees Rs. 2800/=
• Information Technology • SAD • Visual C++ (System, Bios, Memory, Disk, Network Programming) • Visual Basic • Protocol Builds-up • Visual FoxPro • Oracle • Java • Internet, Interfacing Programming.

DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING — Duration 4-5 Months — Course Fees Rs. 1800/=
Electronics fundamentals, digital Electronics fundamentals, DE to IT formulation, DE in Hardware computer function and components component level servicing, trouble shooting and fixing, various troubles and shooting Board level trouble shoot and servicing various casingtypes, Mother board types and SMPS types. Various OS types, OS preparation and installations, Hard disk portioning & file systems, Windows 98 and Windows XP variety installations DOS internal and external command. Software and Antivirus installations preparation of Rescue disk, How to Rescue an affected system regular most problems and Trouble shoots various Bios and setup turned-up modem configuration, Internet setup, Email setup & configuration

DIPLOMA IN NETWORK ENGINEERING — Duration 4 Months — Course Fees Rs. 2850/=
Network fundamentals, DE fundamentals and IT formulations, media access systems and components used there, different type of media and properties used in network, Topologies and variations, Type of Graded cables, (Optical fiber, UTP, STP & Co-arial) cabling & calibration, UTP cable crimping (Cross-over & straight) TPC/IP,UDP, PPP, Slip, Mailto protocol configuration NIC configuration NetWare Types Windows 98, Windows XP, Client Accesses through network Internet Access through Win 98 & XP Internet Distribution server setup through Windows XP & Windows 2000 server configuration and fixing, configuring windows 2000 server as distributed Erver Configuring Windows XP & 2000 as Router for Internet distribution.

DIPLOMA IN VISUAL BASIC — Duration 4 Months
DIPLOMA IN COMPUTER SCIENCE — Duration 6 Months
DIPLOMA IN AUTOCAD — Duration 4 Months
DIPLOMA IN C++ — Duration 4 Months
Course Fees Rs. 1375/=

பிரிவு III ஆரம்பம் 29.01.2005
இச்சலுகை Jan 29 மட்டுமே!

மேலுள்ள பயிற்சி நெறிகளில் ஒன்றைத் தொடரும் மாணவர்கள் கீழுள்ள பயிற்சி நெறியை இலவசமாக கற்றுக் கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்

DIPLOMA IN INTERNET E-MAIL — Duration 2 Months

Softview Computer College
(Authorised Councelling Centre for Queen's Park College, London. A joint Venture with Arom Menporulagam Ltd., India.)
www.scclanka.com
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170, 0777846811
scclanka@hotmail.com
Arya Gowdar Road, West mambalam Road, Chennai 600 033, India.

# ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின் புலிகள் - முஸ்லிம்கள் சந்திப்பு

## நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில்

ஏறாவூர்,ஜன.26

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆழிப்பேரலை பெரும் அனர்த்தங்களை ஏற்படுத்திய பின்னர் விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் கொக்கட்டிச்சோலையில் இடம்பெற்றது.

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக இடமபெயர்ந்து வாழும் காத்தான்குடிப் பிரதேச முஸ்லிம்கள் வேறு காணிகளில் குடியமர்த்தப்படுவதற்குப் புலிகள் எவ்வித ஆட்சேபனைகளையும் தெரிவிக்கப்போவதில்லை என்றும் சந்திப்பில கலந்துகொண்ட மட்டு., அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உறுதியளித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்கனவே உருவாக்கப்பட்டு தற்போது இயங்காத நிலையில் உள்ள தமிழ் - முஸ்லிம் விவகாரங்கள் தொடர்பாக ஆராயும் மூன்று உபகுழுக்களையும் மீணடும் இயங்கச் செய்வதென்றும் இரு தரப்பினரும் தீர்மானித்துள்ளனர். இதன்படி காத்தான்குடி, ஏறாவூர் மற்றும் கல்குடா பிரதேச தமிழ் - முஸ்லிம் மக்களின் காணி விவகாரங்கள் தொடர்பாக ஆராயும் மூன்று உபகுழுக்களையும் விரைவில் கூட்டுவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புலிகள் இயக்கத்தின் இராணுவ ரீதியிலான முகாம்கள் அமைந்துள்ள பிரதேசங்களைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் முஸ்லிம் விவசாயிகள் தமது விவசாயச் செய்கையினை மேற்கொள்வதற்கும் புலிகள் மீண்டும் அனுமதி வழங்கியுள்ளனர். இருதரப்பினருக்கும் இடையிலான அடுத்த சந்திப்பினை மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பிரதேசமொன்றில் வைத்துக்கொள்வது என்றும் இருதரப்பினரும் தீமானித்துள்ளனர். நேற்றுமுன்தினம் பேச்சுக்களில் புலிகள் இயக்கததின் சார்பில் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தலைமையில் மாவட்டப் பொருண்மியப் பொறுப்பாளர் வள்ளல், மட்டக்களப்பு நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்புமாறன், பட்டிருப்புக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

முஸ்லிம் மக்கள் சார்பில் மட்டக்களப்பு மாவட்ட சமாதான சபையின் செயலாளர் யூ.எல்.எம்.என். முபீன், மட்டக்களப்பு மாவட்ட பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் பிரதித் தலைவர் வை.எம்.ஏ. காதர் உட்பட ஏறாவூர், காத்தான்குடி மற்றும் கல்குடா பிரதேசங்களைச் சேர்ந்த 20 முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (த-க)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி செலுத்தும் ஆராதனையும்

மலர்வு 16 - 07 - 1933



உதிர்வு 26 - 12 - 2004

### திருமதி பாக்கியம் மோசேஸ்


எமையெல்லாம் அன்பாக
வழிநடத்திய அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்து மாதமும்
ஒன்றானதோ? உங்கள் பூமுகம்
ஆண்டுகள் கோடியானாலும்
எம் நினைவுகளில் நிற்கும்!

அமரர் திருமதி பாக்கியம் மோசேஸ் அவர்களின் நினைவு ஆராதனை இன்று (26-01-2005) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். அவரின் நினைவு ஆராதனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உடுப்பிட்டி வீதி,
தொண்டைமானாறு.
(41281)(26-17-16)

முன்னாள் EL 7986 கார் உரிமையாளர்,
கணவர் - கி.மோசேஸ்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



றோய் அருள்தாஸ் ஆன்சுஜித்தா (டிலானி) — கருவறையில் 09-09-2001
பீற்றர் றோய் அருள்தாஸ் (றோயன்) — கருவறையில் 06-02-1975
றோய் அருள்தாஸ் அஸ்மினி (றோமியா) — கருவறையில் 12-12-2003

கல்லறையில்: 26-12-2004 (மணற்காடு)

அன்பான கணவரே!
எனது அன்புக் குழந்தைகளே!
குறை ஏதும் இன்றி சந்தோஷமாய்
வாழ்ந்த எம்மைக் கடல் அலை
வந்து அழித்ததோ?
என்னைத் தனியாக விட்டுவிட்டு
நீங்கள் மறைந்து மாதம்
ஒன்று சென்றதோ?
உங்கள் நினைவு தினம் தினம்
நெருப்பாகச் சுடுகின்றது
மீண்டும் ஒரு பிறப்பெடுத்து
எம்மிடம் வந்துவிடுங்கள்!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

15/1,3ஆம் குறுக்குத் தெரு, பாசையூர்.
மனைவி, அம்மா, உற்றார், உறவினர், நண்பர்கள்.
(41282)(42-17-16-26)

## மரண அறிவித்தல்

### தம்பிராஜா ஜெயசீலன்

(நிர்வாக இயக்குநர், Legend NoritaKe Procelain Market Makers (PVT.) Ltd., Inter Asia (PVT.) Ltd)

பம்பலப்பிட்டியைச் சேர்ந்த தம்பிராஜா ஜெயசீலன் அவர்கள் 24-01-2005 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பிராஜா (புங்குடுதீவு - பதுளை பிரபல வர்த்தகர்), தங்கரட்ணம் ஆகியோரின் அன்புப் புதலவனும் திருமதி அரியமலர் அவர்களின் அன்புக் கணவரும் ஜீவிதா, கார்த்திகா, துவாரகன், துலக்ஷன் ஆகியோரின் தந்தையும் கந்தையா, அரியநாயகம், கமலாம்பாள் ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற ஜெயராணி, கமலாசினி (U.S.A.), புஸ்பஞானி (ஆஸ்திரேலியா), சத்தியசீலன் (U.S.A.) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சடாட்சர சண்முகதாஸ், சிவபாதசுந்தரம் (U.S.A.), சந்திரபாலன் (ஆஸ்திரேலியா), அன்ரோனி (U.S.A.), பத்மராஜா (கனடா), மோகன்ராஜ் (கனடா), சிவமலர் (கனடா), ஜெயமலர் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி, துரைசாமி (Doraisons, கொழும்பு) அவர்களின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் இரவு 9 மணி வரையும் தொடர்ந்து இன்று (26-01-2005) புதன்கிழமை காலை 8மணி முதல் 2மணிவரையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகளின் பின்னர் பிற்பகல் 3 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
சத்தியசீலன்
(சகோதரர்),

72, லொறிஸ் வீதி,
பம்பலப்பிட்டி.
T.P.: 2596535. (41288)(26-17-16)

## 31ஆம் நாள் கண்ணீர்ப் பூக்கள்

"சுனாமி" அனர்த்தத்தினால் எம்மை விட்டுப்பிரிந்த உறவுகள்



பாலகுமார் பாசமலர் — பிறப்பு:13.07.1972
பாலகுமார் பாலராஜ் — பிறப்பு:08.09.1995
பாலகுமார் பார்த்திகா — பிறப்பு:18.06.1997
பாலகுமார் பார்த்தீபன் — பிறப்பு:11.04.1999
முருகுப்பிள்ளை பார்வதிப்பிள்ளை — பிறப்பு:14.03.1912

மறைவு: 26.12.2004

ஆழியவளையில் ஆனந்தமாய் வாழ்ந்த
அன்பான எம்முறவுகளே! அலையோடு கலந்தீர்களே!
பண்பான உங்கள் பேச்சை இப்பாரினில் மறப்போமா?
பாச உறவுகள் துடிக்கின்றோம் உங்கள் பிரிவால் - அந்த
பரமசிவனையே இறைஞ்சுகின்றோம் உங்கள் ஆத்மா சாந்திக்காய்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலை வீதி,
ஆழியவளை, தாளையடி. (சி-40628)(42-17-16-26)
க.பாலகுமார், உற்றார், உறவினர்கள்.

# போரால் சீரழிந்த கல்வியை மேலும் பின்னகர்த்திய சுனாமி

பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்
ஆசிரியர்

இலங்கைத்தீவின் கல்வியமைப்பிலும், கல்வித்தர நிலையிலும் யுத்த சூழ்நிலை காரணமாக கடந்த இரு தசாப்த காலமாக பின்நோக்கி இருந்த வடக்கு - கிழக்குப் பிரதேச கல்வி நிலை அதாவது, நாட்டினது தேசிய அளவிலான கல்விப் பெறுபேற்று வீதத்தில் தமிழர் பிரதேச கல்வித்தர நிலை அடைவு மட்டம் ஒப்பீட்டு ரீதியில் பின்தங்கிய நிலையிலேயே காணப்பட்டுவந்தது. அண்மையில் நடைமுறையில் இருக்கின்ற சமாதான காலப் பகுதியில் வீழ்ச்சியடைந்த கல்வி நிலையை மேம்படுத்தும் வழிமுறைகளை அரசின் உதவியுடன் அரச சார்பற்ற நிறுவனங்களும் மற்றும் தமிழீழக் கல்விக் கழகமும், பிரதேச கல்வியியலாளர்களும் ஒருங்கிணைந்த வகையிலான திட்டமிடல் ஊடாக பெருமளவு நிவர்த்தி செய்து கொண்டிருக்கின்ற வேளையில் சுனாமி அனர்த்தம் முழுக் கல்விக் கட்டுமானத்தையும் சிதைவுக்குள்ளாக்கிவிட்டது என்றே கூறலாம். குறிப்பாகக் கல்வி நிர்வாக அடிப்படையிலான கஷ்டப் பிரதேசங்கள் அதிகளவு பாதிப்படைந்து மேலும் அதிகஷ்டப் பிரதேச வரையறைக்குள் உட்படுத்தப்பட்டு விட்டன என்றே கூறலாம்.

இந்து சமுத்திரப் பகுதியில் ஏற்பட்ட சுனாமி பேரலையினால் இந்து சமுத்திர வலய நாடுகள் பௌதிகவளம், பொருளாதாரம், ஆளணி வளம், தொழில் முயற்சியாண்மை, சுற்றுலாத் துறை, கடல்வள இழப்பு என்ற அமைப்பில் பாதிப்படைந்து இருப்பதோடு, கணிசமான அளவு கல்வித்துறையிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை மறுக்கமுடியாது. குறிப்பாக, இலங்கையின் வட கிழக்கு பிரதேச தமிழர் கல்வியையும் பாதிப்படையச் செய்தமைக்கு பல்வேறு தரவுகள் ஆதாரப்படுத்துவதாக உள்ளன. கல்விக் கட்டமைப்பைப் பொறுத்தமட்டில் பௌதிகவள அழிவு, ஆளணிவள இழப்பு, ஆசிரியர், மாணவர்களின் உளரீதியான நீண்டகாலப் பாதிப்பு மற்றும் பொருளாதார இழப்பு என்பன கல்விமீது நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிப்பை உடனடியாகவும், கால ஓட்டத்திலும் ஏற்படுத்தும் வாய்ப்புள்ளது. இதற்குப் பரிகார செயற்றிட்டங்களை ஒருங்கிணைந்த ஓர் அமைப்பின் ஊடாக முன்னெடுக்கப்படுதல் உடனடித் தேவையாக உள்ளது.

### மீள்கட்டுமானப் பணிகள்

வடக்கு - கிழக்குக் கரையோரப் பகுதியைத் தாக்கிய சுனாமியினால் கல்வியில் பின்தங்கிய பிரதேசங்களான வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு, நாகர்கோவில் பகுதி, திருமலை, மூதூர், அம்பாறை, மட்டக்களப்பு கரையோரப் பகுதிகள் அதிகளவில் பல்வேறு அடிப்படையில் பாதிப்பை ஏற்புடுத்தியுள்ளதைக் காணமுடிகிறது. இவற்றை நிவர்த்தி செய்து மீள்கட்டுமானம் செய்ய பலகோடி தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழர் தாயகத்தைப் பொறுத்தமட்டில் இந்த ஆண்டில் பல்வேறு பாடசாலைகள் இயங்கத் தொடங்கினாலும் 33 சதவீதமான பாடசாலைகள் திறக்கப்படவில்லை. இதற்குப் பாடசாலைகள் முற்றாகவோ அல்லது பகுதியாகவோ அழிவடைந்துள்ளமையும், பாடசாலைகள் நலன்புரிநிலையங்களாகவும், அகதி முகாம்களாகவும் இயங்கிவருகின்றமையே பிரதான காரணமாகும். அம்பாறை மாவட்டத்தில் 540 பாடசாலைகளில் 78 பாடசாலைகள் திறக்கப்படவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 326 பாடசாலைகளில் அகதி முகாமாக இயங்கும் 58 பாடசாலைகளும், பகுதியாக சேதமடைந்துள்ள 25 பாடசாலைகளும், முற்றாக சேதமடைந்துள்ள 13 பாடசாலைகளும் இயங்கவில்லை. 25ஆயிரம் மாணவர்கள் பாதிப்படைந்து உள்ளதுடன், 172 மாணவர்களும், 10ஆசிரியர்களும் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அம்பாறையில் 17 ஆசிரியர்கள் உயிரிழந்துள்ளதாகவும், 214 பாடசாலைகளில் 87 பாடசாலைகள் இயங்கவில்லை எனவும் கல்வித் திணைக்கள ஆய்வு அறிக்கைகள் ஆதாரப்படுத்தியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 6 பாடசாலைகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன், 11 பாடசாலைகள் பகுதியாகவும் அழிவடைந்துள்ளதுடன், 113 மாணவர்கள் இறந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் மட்டும் 360 மாணவர்கள் இறந்துள்ளனர் எனவும் அஞ்சப்படுகிறது. திருக்குடும்ப கன்னியர்மடத்தில் உள்ள மாணவர் விடுதி முற்றாக அழிந்து 40 மாணவிகள் இறந்துள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகிறது.

வடமராட்சி கிழக்குப் பகுதியைப் பொறுத்தமட்டில் 6 பாடசாலைகள் முற்றாகவும், 6 பாடசாலைகள் பகுதியாகவும் அழிவடைந்துள்ளதுடன் சில பாடசாலைகள் அகதிமுகாம்களாகவும் இயங்கி வருகின்றன. திருமலையை பொறுத்தமட்டில் 07 பாடசாலை முற்றாகவும், 20 பாடசாலைகள பகுதியாகவும் அழிவடைந்து இருப்பதுடன், 80 மாணவர்கள் இறந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், காரைதீவில் விபுலானந்தர் மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட மாடிக்கட்டடத் தொகுதி 8 தரைமட்டமாகியுள்ளதுடன், 5ஆசிரியர்களும் இறந்துள்ளமை வலய கல்வித் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட கல்வித்துறைக்குக் கட்டட இழப்பு 4 கோடி 89 லட்சம், தளபாடத்துக்கு 2 கோடி 35 லட்சம், உபகரணங்களுக்கு ஒரு கோடி 39 லட்சத்து 10 ஆயிரம் என யாழ்.செயலகம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்முனைக் கல்வி வலயத்தில் 1176 மாணவர்கள் உயிரிழந்ததுடன் பாடசாலைக்கு 241.11 மில்லியன் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

57 பாடசாலைகளில் 15 பாடசாலைகள் முற்றாக அழிவுற்றதுடன், 24 பாடசாலைகள் அகதி முகாம்களாக உள்ளன. 10 ஆசிரியர்கள், 2 சிற்றூழியர்கள், ஒரு தொண்டர் ஆசிரியர் உயிரிழந்துள்ளதுடன் ஆயிரத்து 815 மாணவர்கள் காயமடைந்துள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.ரி.நிஸாம் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் முற்றாக 46 பாடசாலைகள் சேதமடைந்து இருப்பதுடன், 79 பாடசாலைகள் பகுதியாகச் சேதமடைந்துள்ளன. இவற்றினைப் புனரமைப்புச் செய்ய 500 மில்லியன் ரூபாவுக்கு மேல் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கில் மூவாயிரத்து 200 சிறுவர்கள் தாய் அல்லது தந்தையரை இழந்துள்ளனர் என யுனிசெவ் நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

நாட்டின் தேசிய அளவில் கல்வியைப் புனரமைக்க 164 மில்லியன் ரூபா தேவை எனவும் 80 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் ஏதோ ஒருவகையில் பாதிப்படைந்திருப்பதாகவும் 3 ஆயிரத்திற்கும் அதிகமான ஆசிரியர்கள் இடம்பெயர்ந்து உள்ளனர் எனவும் கல்வி அமைச்சின் அறிக்கைகள் சுட்டிக்காட்டியுள்ளன. மேலும், முல்லைத்தீவு வடமராட்சிக்கு 16 கோடி ரூபா தேவை எனவும் திருமலைக்கு 13 கோடியும், மட்டக்களப்புக்கு 20 கோடியும், அம்பாறைக்கு 21 கோடி 10 லட்சமும் தேவை எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றின் ஊடாக வடக்கு - கிழக்கு தமிழர் பிரதேசக் கல்விக் கட்டமைப்பு எந்தளவுக்குப் பாதிப்படைந்துள்ளது என்பதை உணர முடிவதுடன் இவற்றினை மீள்கட்டுமானம் செய்வது உடனடித்தேவையாக உள்ளது.

### உளமேம்பாட்டுத்திட்டம்

கல்வியமைப்பில் உடனடித் தேவையை நிறைவுசெய்யும் அதேவேளை, நீண்டகாலப் பாதிப்பை உண்டுபண்ணும் உளமேம்பாட்டுத் திட்டங்களை வழிவகுப்பதும் தேவையானதாகும். உள அடிப்படையில் பாதிப்படைந்துள்ள மாணவர்களின் நலன்கருதி ஆற்றுப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்தல் அவசியமாகின்றது. அந்தவகையில், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் ஆற்றுப்படுத்தும் அரங்கச் செயற்பாட்டுக்குழு, ஆசிரியர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், உளநலசமூக அமைப்புகள், அரசசார்பற்ற நிறுவனங்கள் செயற்படத் தொடங்கியுள்ளன. இருந்தாலும் இவற்றுக்கு இடையிலான ஓர் ஒருங்கிணைந்த வகையிலான செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவது கூடிய பயன்பாட்டைத்தரும் என்பது பலரினது எதிர்பார்ப்பாகும்.

மாணவர்கள் உளரீதியான நெருக்கீடு, பயத்தன்மை, விரக்தி நிலைக்கு உட்படல், தற்கொலைக்கு முயற்சித்தல், துஷ்பிரயோகச் செயல்களுக்கு உட்படுகின்ற நிலைகளை தவிர்க்கும் உளநலமேம்பாட்டுச்செயற்றிட்டம் அவசியமாகிறது என கொழும்பு பல்கலைக் கழக உளவியல் பேராசிரியர் தயாரோகண அத்துகோரளை, யாழ்.பல்கலைக்கழக உளவியல் பேராசிரியர் தயா சோமசுந்தரம் போன்றோர் குறிப்பிட்டுள்ளமை முக்கியமானதாகும்.

இதன் தாக்கத்தின் வெளிப்பாடான எதிர்காலத்தில் 'விஷேட கல்வித்திட்டம்' நடைமுறைப்படுத்தப்படுதல் விரிவாக்கம் பெற வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுவதுடன், **Mental Health Face in Disaster** என்ற அமைப்பை உருவாக்கி ஆற்றுப்படுத்தல் மற்றும் வழிகாட்டல் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

பாதிப்படைந்த கல்வியமைப்பை ஒழுங்கமைப்பது உடனடித் தேவையாக உள்ளதுடன், பாடசாலையின் பௌதிக வளக்கட்டமைப்பு, இலவச பாடநூல் பெறுதல், சீருடை பெறுதல், உணவு பெறுதல் என்பனவற்றையும் நிவர்த்திசெய்ய வேண்டியுள்ளது. மேலும் கற்றல் கற்பித்தலுக்கான பாடசாலை உபகரணங்களைப் பெறுவதற்கும் போசாக்குணவை வழங்குவதற்கும் பாதுகாப்பு, அன்பு அரவணைப்பை வழங்குவதற்கும் ஒழுங்குமுறைகள் வகுக்கப்படல் அவசியமாகிறது. இதற்கு ஏற்ற ஒழுங்குமுறைத் திட்டமிடல்கள் வகுக்கப்படும் பொழுதுதான் இழந்த கல்வியை மீட்க முடியும் என்பது உறுதியாகும். ★

## கல்விச்சாலை



ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையில் கற்று ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து வேறு பாடசாலைகளுக்குச் செல்லவுள்ள மாணவர்கள் பாடசாலைக்கு தங்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட கதிரைகளில் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

(படம் - வலி.வடக்குச் செய்தியாளர்)



உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளிக்கு சறுக்கு நிலையத்தை அமைத்து உதவிய ச.அசோக்குமார் அதனை சம்பிரதாயபூர்வமாகக் கையளித்த பின்னர் நிர்வாகிகள் சேர்ந்து எடுத்துக்கொண்ட படம். (10)



கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஐந்தாம் தர புலமைப்பிரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவன் சோ.திரியம்பகசர்மாவுக்கு பாடசாலையின் பழைய மாணவர் சங்கத் தலைவர் இ.இரத்தினதாசன் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (10)



பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் உப அதிபர் ஆறு.திருமுருகன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

வலி.மேற்கு பிரதேச செயலக கணக்காளர் திருமதி இ.உதயகுமார், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி தி.கமலநாதன், போதகர் வி.பத்மதயாளன், பாடசாலை முதல்வர் கி.சிவராஜா ஆகியோரும் படத்தில் உள்ளனர். (10)

# அரசு உதவும் என்ற நம்பிக்கையை தமிழ் மக்கள் இழந்துவிட்டனர்

## சந்திரநேரு எம்.பி.தெரிவிப்பு

கொழும்பு,ஜன.26

இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு உதவும் என்று எதிர்பார்க்க முடியாது. அந்த நம்பிககையை இழந்துவிட்டோம். நமது சமுதாய மேம்பாட்டிற்கு நாமே ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

- இவ்வாறு திகாமடுல்ல மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சந்திரநேரு தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்ட மீனவர்களுக்கான மீனவ சமாசத்தின் அலுவலகம் ஒன்று நேற்று முன்தினம் திருக்கோயிலில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. கடற்புலிகளின் கரையோரப் பிரதேச பிரதிப் பொறுப்பாளர் இலத்தியன் மீனவ சமாச அலுவலகத்தை திறந்து வைத்தார்.

இவ் வைபவத்தின் பின் அங்கு உரையாற்றியபோதே முன்னாள் எம்.பி.சந்திரநேரு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களுக்கு அரசு அனைத்து உதவிகளையும் செய்துள்ளது. சர்வதேச சமூகத்திடமிருந்து கிடைத்த உதவிகள் அனைத்தும் தென்பகுதியில் முடக்கப்படுகின்றன. அங்கே மீள் கட்டமைப்புப் பணிகளும், வீடமைபுத் திடடங்களும் கூட நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

ஆனால், தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் இன்னும் சடலங்கள் கூட மீட்கப்படாமல் கிடக்கின்றன. தனியார் நிறுவனங்களும், தொண்டர்அமைப்புகளும் வழங்கும் உதவிகளுடனேயே உயிர் வாழ்கின்றனர் எமது மக்கள்.

தமிழ்ப் பிரதேசங்களில் மூன்று வகையான அகதிகள் உருவாக்கப்பட்டுள்ளனர். 1983ஆம் ஆண்டு தென்பகுதியில் இடம்பெற்ற இனவன்செயலால் பாதிக்கப்பட்டவர்கள், 20 வருட யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், இப்போது சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் என மூன்று வகையினர் உள்ளனர்.

1983 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கும், யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்களுக்குமே இன்னும் முறையான நிவாரணங்கள் வழங்கப்படவில்லை. இப்பொழுது சுனாமிப் பேரலை எல்லாவற்றையும் சூறையாடிவிட்டது.

தென்பகுதியைக் கட்டியெழுப்பும் அரசு, தமிழ் மக்களை முற்றாகவே கைவிட்டு விட்டது. மேலும், அரசு தமிழர்களுக்கு உதவும் என்ற நம்பிக்கையும் இல்லாது போய்விட்டது.

மீனவ சமூகத்தை மீளக் கட்டியெழுப்ப மீனவ சமாசங்களால் மட்டுமே முடியும். எனவே, அவற்றைப் பலமுள்ள ஓர் அமைப்பாக உருவாக்குவதன் மூலமே அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்று முன்னாள் எம். பி.சந்திரநேரு அங்கு மேலும் குறிப்பிட்டார். (த-க)

# கமநலசேவை நிலையங்களில் விவசாயவங்கி அமைக்க முடிவு

வலிகாமம் தெற்கு,ஜன.26

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சகல கமநலசேவை நிலையங்களுக்குமென விவசாய வங்கிகள் பெப்ரவரி மாதம் தொடக்கம் அமைக்கப்பட்டு செயற்பட உள்ளன.

விவசாய வங்கிகள் ஆரம்பிக்கப்படும்போது விவசாய வங்கி முகாமையாளர்களையும் கமத்தொழில் திணைக்களத்தினூடாக நியமனம் செய்ய திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள கமநலசேவை நிலையங்களுள் நான்கில் மட்டுமே பெரும்பாக உத்தியோகத்தர்கள் உள்ளனர். ஏனைய இடங்களில் பெரும்பாக உத்தியோகத்தர்கள் இல்லாமையால் ஒவ்வொரு பிரிவிலும் ஒரு விவசாய வங்கியை அமைக்கும் திட்டத்தை கமத்தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ள முடியவில்லை.

கடந்த வாரம் 220 பெரும்பாக உத்தியோகத்தர்கள் அகில இலங்கை ரீதியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களுள் யாழ்ப்பாண மாவட்ட தேவைக்கென 46 பேரை திணைக்களம் நியமித்திருந்தபோதிலும் 14 தமிழர்களே தரப்பட்டுள்ளார்கள்.

கடந்த வாரம் கமத்தொழில் திணைக்கள யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் க.சுந்தரேசனால் அழைத்துவரப்பட்ட பத்துப் பேருக்கு உரிய பயிற்சிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

விவசாயிகளின் பல்வேறு தேவைகளுக்கென விவசாய வங்கிகள் மூலம் ஹட்டன் நஷனல் வங்கி 2002ஆம் ஆண்டில் 17 மில்லியன ரூபாவும், 2003ஆம் ஆண்டில் 33 மில்லியன் ரூபாவும், கடந்த வருடம் 50 மில்லியன் ரூபாவும் விவசாய சம்மேளனங்களின் சிபார்சுக்கமைய வழங்கியுள்ளது.

விவசாயிகள் இக்கடன்களை மீள செலுத்தியமையால் மேலும் கடன்களை வழங்க வங்கி அக்கறை காட்டி வருகிறது.

சிறிய விவசாயிகள் பத்தாயிரம் ரூபாவுக்குட்பட்ட கடன்களை பெற்றுக்கொள்ள வசதியாக விவசாய வங்கிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

(த-152)


## நன்றி செலுத்தும் வழிபாடு

1998 - 02 - 21



2004 - 12 - 26



2004 - 11 - 27

கிறிஸ்ரின் அபிஷா — கிறேஸ் வர்ஷா

நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த
நாள்களாய் நிலைத்திருப்பேன் (சங்.23.6)

நாளை (27-01-2005) வியாழக்கிழமை திருச்சபை வீதி நவாலியில் உள்ள இல்லத்தில் நன்றி செலுத்தும் வழிபாடு இடம்பெறும். இந்நிகழவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நவாலி (41268)(21-17) குடும்பத்தினர்



### கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
### கரவெட்டி
## பகிரங்க ஏல விற்பனை

எமது சங்கத்திற்கு சொந்தமான CD. 50 கொண்டா ரக மோட்டார் சைக்கிள் 01-02-2005 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

மேற்படி மோட்டார் சைக்கிளை பார்வையிட விரும்புபவர்கள் சங்க அலுவலக நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணி வரை பார்வையிடலாம்.

கரவெட்டி ப.தெ.வ.அ.கூ.சங்கம்.
கொடிகாமம் வீதி.
நெல்லியடி. கரவெட்டி.

க.பரமேஸ்வரன்
பொது முகாமையாளர்

(சி-40626)(21-17)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

'சுனாமி' அனர்த்தத்தின்போது இயற்கை அன்னை எம்மிடமிருந்து பறித்தெடுத்த யா/உடுத்துறை மகா வித்தியாலயத்தின் மாணவச் செல்வங்களுக்கும், ஆசிரியைகளுக்கும், ஆசிரியர்களது குடும்ப உறவுகளுக்கும் எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

| மாணவர் பெயர் | தரம் | மாணவர் பெயர் | தரம் | மாணவர் பெயர் | தரம் |
|---|---|---|---|---|---|
| ரவிச்சந்திரன் யதீஸ் | 1 | குமாரலிங்கம் நிரோஜினி | 5 | சிறீரஞ்சன் சுமதா | 10 |
| ரவீந்திரராசா அமிர்தன் | 1 | இராம்ச்சந்திரன் தயாளினி | 6 | தங்கராஜா கோமதி | 11 |
| சிவராசா ஹரிகரன் | 1 | கந்தசாமி ஜெனன் | 6 | நாகதம்பி ராதிகா | 11 |
| இராசநாயகம் கதீஸ் | 1 | சௌந்தரராசா ஜெனனி | 6 | பாலகிருஸ்ணன் பிறேமா | 11 |
| துரைரத்தினம் நிதுஷா | 2 | சிவச்சந்திரன் அர்ச்சனா | 6 | ரவீந்திரன் ஜெஸி | 11 |
| இன்பநாதன் நிதுசாந்தன் | 2 | சிவனேசலிங்கம் நிறோஜினி | 7 | வன்னியசிங்கம் நிவேஸ் | 11 |
| உதயகுமார் கிந்துசா | 2 | செல்லச்சாமி நரேஸ் | 7 | சிவசுப்பிரமணியம் ஜெயப்பிரியா | 11 |
| மனோகரன் கௌதமன் | 2 | ஐயாத்துரை கோஷலா | 7 | சுப்பிரமணியம் அமலசிறி | 11 |
| பன்னீர்ச்செல்வம் ஜெனுசுயா | 2 | நாகேஸ்வரன் தாரணி | 7 | வெற்றிவேலாயுதம் சுலக்ஷனா | 11 |
| தங்கராசா சிந்துஜா | 3 | சிவலிங்கம் வினோஜா | 8 | சிவலிங்கம் சுகந்தினி | 12 |
| யோகராசா மதுசியா | 3 | திருபாலசிங்கம் திவ்யா | 8 | கணபதிப்பிள்ளை சிவரேக்கா | 12 |
| பன்னீர்ச்செல்வம் ஜெனுதா | 3 | பாலசுப்பிரமணியம் பேரிகா | 8 | சௌந்தரராசா ரேணுகா | 13 |
| செல்வநாதன் சுமிதா | 3 | ஜெயராசா பௌத்திரா | 9 | இராமச்சந்திரன் சிவப்பிரகாஸ் | 13 |
| பஞ்சாட்சரம் சபிதா | 3 | சௌந்திரராசா விஜிதரன் | 9 | ✪ செல்வி நவனீதராசா அரியரஞ்சினி (கடல் வள ஆசிரியை) | |
| கணேஸ்வரன் ஜிசிதரன் | 3 | சந்திரலிங்கம் திவ்யா | 9 | | |
| ஜோச்ஜீவானந்தம் கயந்தா | 3 | கணேஸ்வரன் ஜிசிதா | 9 | ✪ திருமதி சந்திரகுமார் உதயசசி (G.T.Z விசேட செயற்திட்ட ஆசிரியை) | |
| நாகரட்ணம் விசித்திரா | 4 | யோகராசா றதீஸ் | 10 | | |
| ஐயாத்துரை கோகிலா | 4 | சுந்தரலிங்கம் யுஷானி | 10 | அவரது மகன் | |
| பேதுறுப்பிள்ளை சுஜித் | 4 | ஜெயபாலன் ஜெயசாளினி | 10 | ✪ சந்திரகுமார் தனுசியன் | |
| சிவனேசலிங்கம் சுமதி | 5 | சிவசிதம்பரம் றதீஸ் | 10 | ✪ புனிதசீலன் யகானா | |
| சாந்தகுமார் சோபிகா | 5 | தவராசதுரை நதியா | 10 | (ஆசிரியை புனிதசீலன் அமிர்தராணியின் மகள்) | |

கள்ளமில்லாச் சிந்தையுடை பள்ளிச்சிறார்களே!
அள்ளி அணைத்த புத்தகமும் அன்பு சொரியும் வதனமும்
துள்ளி ஓடிவரும் அழகும் தூய்மையான பண்புகளும்
பள்ளியிலே பட்சிகளாய் என்றும் சஞ்சரிப்பீர்
எள்ளளவும் எண்ணாத "சுனாமி" அசுரனே!
பள்ளிச் சிறார்களையும் பறித்து நீ சென்றுவிட்டாய்
வெள்ளிகளாய் வானத்தை அலங்கரித்து எம்சிறார்
பள்ளியின் நாமத்தைப் பொறித்தாங்கே சாந்தி கொள்வீர்.

அதிபர், ஆசிரியர்கள் , ஊழியர், மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பழைய மாணவர்கள்
யா/உடுத்துறை மகா வித்தியாலயம்.

(40629) (21-17)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

சுனாமி பேரலையினால் உயிர் நீத்த
எமது அலுவலக ஊழியர்களான
அமரர் பிறேமலதா இலங்கேஸ்வரன்
அமரர் பஸ்தியாம்பிள்ளை மாட்டின் நவரத்தினராசா
மற்றும் அவருடன் உயிர்நீத்த மாட்டின் நவரத்தினராசா
குடும்பத்தினருக்கும் மற்றும் சுனாமி பேரலையால் உயிர்நீத்த
அனைவருக்கும் எமது இதய பூர்வமான அஞ்சலியைச் செலுத்துவதோடு,
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் பிரிவால் துன்புறும்:
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் உத்தியோகத்தர்களும்.
முல்லைத்தீவு மாவட்டம்.

பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம்,
முல்லைத்தீவு. (41300) (24-11-19)

## சுதந்திரத் தொழிலாளர் அமைப்பு விபரங்களைத் திரட்டி வருகிறது

யாழ்ப்பாணம்,ஜன.26

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களைச் சேகரிப்பதற்கென சுதந்திரத் தொழிலாளர் அமைப்பினால் யாழ். மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள குழுவினர் முல்லைத்தீவுக்குச் செல்லவுள்ளனர்.

அவர்கள் அங்கு சென்று பாதிக்கப்பட்ட இடங்களை நேரடியாகப் பார்வையிடுவதுடன், பாதிக்கப்பட்ட மக்களைச்சந்தித்து அவர்களிடமிருந்து விவரங்களைத் திரட்டுவதோடு, அவர்களுக்குத் தேவையான உதவிகள் பற்றியும் கேட்டறியவுள்ளனர்.

இக்குழுவில் ஊவா மாகாண முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.வேலாயுதம், இலங்கைத் ஆடைத் தொழிற்சாலை மத்திய நலன்புரி நிலைய இணைப்பாளர் திருமதி எஸ். புஸ்பராணி மற்றும் சர்வதேச தகவல் பரிமாற்று நிறுவக ஆசியப் பிராந்திய இணைப்பாளர் பற்றீசியா லோட்றைன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

(10-202-203)

## பொதுக்கூட்டம்

கோண்டாவில்,ஜன.26

வடக்கு - கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்க யாழ். மாவட்டக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை யாழ். செயலகத்துக்கு முன்பாகவுள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்குத் தலைவர் வீ.நவரத்தினராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்குச் சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(த-49)

## ஆழிப்பேரலை அனர்த்தத்தில் அள்ளுண்ட மழலைகளின் 31ஆம் நாள் நினைவு கூரல்


ஜெயராசா பௌத்திரா
மலர்வு
01.07.1990


விஜயதாசன் ஜினிதா
மலர்வு
24.06.1999


விஜயதாசன் ஜிவிதரன்
மலர்வு
07.01.2002

மறைவு: 26.12.2004

ஆழ்கடலில் விளையாடி முத்தள்ளிய
காலம் அன்று!
இன்று ஆழ்கடலே சிறுவர்களின்
மழலைப் பேச்சுகளையும்
புன் சிரிப்புகளையும்
அள்ளிச் சென்றுள்ளது.
தண்ணீரில் கரைந்த
எமது செல்வங்களிற்காக
கண்ணீரைச் சொந்தமாக்கி
வாழ்கின்றோம்.

இவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

சின்னக்கா, சின்னச்சித்தி,
உஷா
உடுத்துறை வடக்கு, தாழையடி (குடும்பத்தினர்).

த. முகவரி:
ஜெ.உஷா,
போ.க. பிரிவு,
...ளை.

(சீ-40643) (24-11-19)

உ
அம்பிகை துணை

# மங்களகரமான திறப்பு விழா அழைப்பு

## சிதம்பரநாதன் ஞாபகார்த்த இல்லம்

இடம்: இணுவில் சிவகாமி அம்மன் கோயிலடி
காலம்: 27-01-2005 வியாழக்கிழமை
நேரம்: பிற்பகல் 3.30 மணி (ப.நே.)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
சுபம்.

நெட்டிலிப்பாய்.
கோண்டாவில். - குடும்பத்தினர்.

(41296) (24-11-19)

# 25ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 27 - 04 - 1938



இறப்பு 02 - 01 - 2005

## திருமதி சரவணமுத்து இரத்தினபூபதி

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (26.01.2005) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

G.P.S. வீதி,
கல்வியங்காடு. (41289) (24-11-19)

# மீளாத் துயில் மீண்டு மீள வர மாட்டாயா...?



# செல்லையா ரஜனிகாந்

தோற்றம் 22.11.1974

மறைவு 25.01.2005

எங்களில் ஒருவனாக நேற்று வரை
ஒன்றாய் உடனாய் நின்றவனே! - சங்கமன்
இன்றுமட்டும் ஏன் தனியனாய் சென்றாய்?
உன் காலடிபட்டு காலையில் கண் விழிக்கும் -
கடையின்
வாசல்படிகள் உன் வரவு தேடி
காத்திருக்கின்றன.
மீளாத் துயில் மீண்டு
மீள வரமாட்டாயா.....?

(41303) (42-24-11-19)

110, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

பரதன் மல்ரியின் சேவிஸ்
உரிமையாளரும் சக ஊழியர்களும்.

(41303)

## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி

### கார்த்திகேசு அன்னப்பிள்ளை

மலர்வு : 1947-09-21
உதிர்வு: 2004-12-27

கடந்த 2004.12.27 அன்று வைகுண்டம் எய்திய எமது குடும்பத் தலைவியின் மறைவுச்செய்தி கேட்டு எமக்குப் பலவழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகள்!

இன்று (26.01.2005) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வெள்ளாம்போக்கட்டி,*
*கொடிகாமம்.*
*T.P.: 0777-169173.*

\- குடும்பத்தினர்.
(41306)(42-26-17-16)

## நீங்கா நினைவுகளில் ஈராண்டு

தோற்றம்
1935
-
07
-
26



மறைவு
2003
-
01
-
19

### அமரர் கந்தையா இராசையா

முன்னாள் மேற்பார்வையாளர், கரவெட்டி ப.தெ.வ.அ.கூ.சங்கம்)

திதி: பிரதமை 2005-01-26

ஆண்டுகள் இரண்டு
உருண்டோடி விட்டாலும்
ஓசையின்றித் தொடரும்
உங்கள் நினைவுகளே!

ஐங்கரபதி,
அல்வாய் தெற்கு.
(41302)(26-17-16)

மனைவி, பிள்ளைகள்.

## முன்பள்ளி திறந்துவைப்பு

மாதகல்,ஜன.26

மாதகல் சகாயபுரம் முன்பள்ளித் திறப்புவிழா நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் எஸ். மகேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கத் தலைவர் வி.சிற்றம்பலம் கலந்துகொண்டு சிறார்களுக்குரிய கல்வி உபகரணங்களைத் தலைவரிடம் கையளித்தார்.

இந்தத் திறப்பு விழா நிகழ்வில் விருந்தினர்கள் உட்படப் அப்பகுதி மக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

(10-95)

## ஆத்மசாந்தி வேண்டி இன்று விசேட பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,ஜன.26

'சுனாமி' இயற்கையனர்த்தத்தால் பலியான மக்களின் ஆத்மசாந்தி வேண்டியும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆத்மபலம் வேண்டியும் யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் விசேட பிரார்த்தனை நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 6.45மணிக்கு நடைபெறவுள்ளது.

(த-202)


Jayoda **ஜயோதா** ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6639431 முதல் 6648827 வரை
சீட்டிழுப்பு இல. 103 திகதி 24-1-2005

வெற்றி எண்கள் **8 4 5 6 4 9** சுப்பர் எண் **16**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,70,01,925/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,70,01,925/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 06 | 50,000/- | 3,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 75 | 5,000/- | 3,75,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 781 | 500/- | 3,90,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 7,818 | 50/- | 3,90,900/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 77,432 | 10/- | 774,320/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 08 | 5,000/- | 40,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 77 | 1,000/- | 77,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 780 | 100/- | 78,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 7,757 | 20/- | 155,140/- |
| மொத்தம் | 94,743 | | 41,83,460/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 41,83,460/-

இந்த வியாழக்கிழமை
சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,72,19,175/-**

தொடர் இல. 7597622 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஜனவரி 27 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்


அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான லட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6639820-7-67
6644248-5-19
6644586-1-11
6641996-2-17
6644555-4-05
6640929-5-95
6643639-1-23
6645538-7-18


## ஈராறிழிகளுடன் ஆறு ஆண்டுகள்

வையகத்திற்காய்
1948
-
01
-
19



விண்ணிற்காய்
1999
-
02
-
01

### அமரர் வியாகேசு யோகராஜா

(ஆசிரியர், யா/கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தி.,
வானம்பாடி வில்லிசைக்குழு நாயகன் வானம்பாடி யோகராஜ்)

திதி: பிரதமை (26-01-2005)

*பாசத்தின் இருப்பிடமாய் பண்பின் பிறப்பிடமாய் – இசை*
*பாடி சபைகவர்ந்த பாடகனாய் வாழ்ந்து – இப்*
*பாரினில் வாழ வழிகாட்டிச் சென்ற அன்பு அப்பாவே!*
*மூவிரண்டு ஆண்டுகளென்ன மூவாயிரம் ஆண்டுகள் சென்றாலும் – அன்பு*
*முகம் காண ஏங்கும் நீங்காத நினைவுகளுடன்...*

எம் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல சந்நிதி முருகனை வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்:
(41301)(26-17-16) தாய், மனைவி, பிள்ளைகள்.

## உங்களுக்கு எமது இதயபூர்வமான நன்றிகள்

இலங்கையின் கரையோரப் பகுதிகளை பெரும் அழிவுக்குள்ளாக்கிய சுனாமி அனர்த்தமானது நடைபெற்று ஒரு மாதத்தையும் கடந்து விட்டது. இருப்பினும் அது நம்மனைவரது நினைவுகளிலும் என்றும் நீங்காத சுவடைப் பதித்து விட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் உயிர்களை இழந்தும், பல்லாயிரக்கணக்கானோர் தமது உடைமைகளை இழந்தும் அநாதரவாகக் காணப்படுகின்றனர்.

எமது அண்மைக்கால வரலாற்றிலே பெரும் அழிவை ஏற்படுத்திய இச்சம்பவத்தின்போது நாட்டின் சகல பிரதேச மக்களும் சுயநலமின்றி பாதிக்கப்பட்டோருக்கு ஒன்றிணைந்து உதவிகளை வழங்கினார்கள்.

எமக்கு தேவையான சந்தர்ப்பத்தில் பெருந்தன்மையோடு தமது பங்களிப்பை வழங்கிய சர்வதேச சமூகம், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய சர்வதேச நிறுவனங்கள், அரசாங்கங்கள், INGOக்கள், NGOக்கள், மதகுருமார்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்.**
410/112, புல்லர்ஸ் வீதி, கொழும்பு 7.
தொ. இல: 2693254, 4716575

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை மகாலிங்கம்

(பிரதம எழுதுநர், தொழிநுட்பக் கல்லூரி, கௌரவ செயலாளர், ஊழியர் ஐக்கிய நாணயச்சங்கம், கொக்குவில்)



சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை மகாலிங்கம் 18.01.2005 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 19.01.2005 புதன்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

ஏழாலை மேற்கு, ஏழாலை. (41293)(26-16-17)

## 5ஆம் ஆண்டு நிறைவு நாள்



### திருமதி டல்சியா மயூரன்

ஆண்டு ஐந்துகள்
அடக்கமாகக் கடந்துவிட்டன!
ஆனாலும் ஆறாத நெஞ்சுடன்
உன் நினைவில் தவிக்கிறேன்.
ஆறு மாதங்களே எம் பந்தத்தில் இருந்து
ஆறு நிமிடங்களில் ஆண்டவனிடம்
சேர்ந்தாயே!
ஆறவில்லையம்மா என்னிதயம்
ஆற்றுவாயா ஆண்டவன் இடத்தில் - நின்று
ஆண்டுகள் ஆயிரம் கடந்தாலும்.

என்றென்றும் உன் அன்புப் பிரிவால் ஏங்கித்தவிக்கும்
**அன்புக் கணவர் - மயூரன்,**
**தாய், தங்கை.**

(41314)(43-18-45)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊழியர்
**சோமசுந்தரம் அருணப்பிரசாத்**

அவர்கள் 24-01-2005 அன்று அகால மரணமடைந்தமையையிட்டு ஆழ்ந்த அதிர்ச்சியடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (41278)(26-16-17)

**S.V.M. சிற்றி ஏஜன்சி நிறுவனமும்**
**சக ஊழியர்களும்.**

## எம் நெஞ்சை விட்டகலாத 31 ஆம் நாள் கண்ணீர்ப் பூக்கள்

26-12-2004 அன்று இயற்கைப் பேரனர்த்தத்தின் கோரப் பசிக்கு இரையான எமது கலாசாலைச் சமூகத்தின் நணபர்களுக்கும் உறவுகளுக்கும் கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

*கலாசாலைச் சமூகத்தினர்,*
*கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.*

(41278)(43-18-45)

## மரண அறிவித்தல்கள்

### கந்தசாமி இராஜசுந்தரம்



**(மானிப்பாய் பிரதேச சபையின் இளைப்பாறிய அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்)**

நல்லூர், வைமன் றோட்டைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி இராஜசுந்தரம் அவர்கள் நேற்று (25.01.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - பொன்னம்மா தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்ற கணேஸ்வரியின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி, நவமணி, கண்மணி, பஞ்சலிங்கம் (நிர்வாக முகாமையாளர் ஏறோலங்கா விமான சேவை - யாழ்ப்பாணம், இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வைரமுத்து, இராசதுரை மற்றும் புனிதவதி ஆகியோரின் மைத்துனியும் சாந்தினி, பரமேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் லஷ்மன் (சுபாறாணி ஜுவலஸ் - கொழும்பு, பிரபாகரன், தர்மஜா (கனடா), லவநந்தி (லண்டன்), காஜத்திரி (CHAMBER COMMERCE T.C.O) ஆகியோரின் பெரியப்பாவும் கரிசன், திவ்வியன், டினான் ஆகியோரின் பேரனும் மானிப்பாய் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மகேஸ்வரியின் அன்பு மருமகனும் சிறிகிருஸ்ணராஜா, காலஞ்சென்ற பரமேஸ்வரி, நாகேஸ்வரி, கமலேஸ்வரி, விக்னேஸ்வரன் (கனடா), கர்னேஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2005) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு 18/9, வைமன் வீதி, நல்லூரில் நடைபெற்று, பூதவுடல தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*18/9, வைமன் வீதி,*
*நல்லூர்,*

(சீ-40649)(43-18-45)

தகவல்:
க.பஞ்சலிங்கம்
(சகோதரன்).

### செல்லையா ரஜனிகாந்

**(சுரேன்/சங்கமன்)**



நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா ரஜனிகாந் (சுரேன் / சங்கமன்) அவர்கள் நேற்று (25.01.2005) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லையா (ஸ்கைவே - கல்வியங்காடு) - கேதீஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் இந்திரசித்து - மனோன்மணி தம்பதிகளின் மருமகனும் கஜேந்தினியின் (ஜெயந்தி) அன்புக் கணவரும் ரமணிகாந், ரதனி ஆகியோரின் அன்புச் சகோதரனும் வசந்தி, ஜெயலட்சுமி, புவனேஸ்வரி, மைதிலி, சுஜீந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் பாலசுப்பிரமணியம், புஸ்பராசா, சகிகுமார் ஆகியோரின் சகலனும் வாகீசன், விவிதன், தூரிகா, பிரவீனன், வினுகா ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 4/2, அம்பாள் வீதி, நாயன்மார்கட்டில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நாளை (27.01.2005) வியாழக்கிழமை ஒரு மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*4/2, அம்பாள் வீதி,*
*நாயன்மார் கட்டு,*
*நல்லூர்.*

(41323)(43-18-45)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஒருவருட நினைவுகளில்...



தோற்றம்
06. 02. 1951

மறைவு
07. 02. 2004

திதி:
26.01.2005

அமரர்
### பாலசுப்பிரமணியம் ஜெகதீஸ்வரன்

**எம் அன்புத் தெய்வம் மறைந்து இன்று ஆண்டுதான் ஒன்று சென்றாலும் - என்றும் ஆறாதே எம் துயரம். என்றும் உங்கள் நினைவுடன் வாழும்...**

*கலைமகள் வீதி,*
*நல்லூர் வடக்கு,*
*கல்வியங்காடு.*

-குடும்பத்தினர்.

(41326)(43-18-45)

## கண்ணீர் அஞ்சலி

அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ. சங்க பணியாளர் *திரு. செ. பத்மநாதன்* அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னத்தம்பி செல்லத்துரை**
**(றோலர்)**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அள.மல்.ப.நோ.கூ.சங்க
ஊழியர் நலன்புரிச்சங்கம். (41311)(43-18-45)

## கண்ணீர் அஞ்சலி

**செல்வி ஐங்கரன் நிரோஷா**
*(மங்கையர்க்கரசி வித்தியாசாலை மாணவி)*

தோற்றம்:08-11-1991 மறைவு:24-01-2005

துள்ளித்திரியும் பள்ளி சென்ற காட்சியும் முல்லைச் சிரிப்பு முகத்தையும் கண்டு மகிழ்ந்த பெற்றோருக்கு காலன் வந்து அள்ளிச் சென்றானே! துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

நிறைஞ்சனாஸ், நாதன்ஸ்
உரிமையாளரும், ஊழியரும். (சீ-40650)


## வீடு வாடகைக்குத் தேவை

சிறு குடும்பம் ஒன்றுக்கு தனியாகவோ அல்லது இணைந்தோ (ANNEX) ஒரு வீடு வாடகைக்கு உடன் தேவை.
தொடர்பு:- 0214 591946,
0777 745615,
0777 761576. (41308)

**நிறைஞ்சனாஸ் சங்கானை**
அர்ஜுன் (இருவேடம்) லைலா
வடிவேல் நடித்த ஜெய் சூர்யா
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
ANACONDA - 2 இரவு 8.45 (C/39654)



**நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந்த், சினேகா, வடிவேல், ஜனகராஜ் இன்னும் பலர் நடித்த
**ஆயுதம்**
கா.நேரம் 10.30, 2.30, 6.30, 9.30(பி.நே.)



**ராஜா யாழ்ப்பாணம்**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), நயனதாரா, லட்சுமி, வடிவேல், பிரகாஸ்ராஜ், நெப்போலியன் நடித்த
கே.பாலசந்தரின்
**ஐயா** இயக்குநர் ஹரி
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.



**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
தனுஸ், ஸ்ரீதேவி, கருணாஸ், கபாலி, குணால், நாசர் நடித்த
**தேவதையைக் கண்டேன்**
தினசரி 11.00, 3.00, 7.00, 10.00 (பி.நே.)
(C/39654)




## மரண அறிவித்தல்கள்

### கபிரியல்பிள்ளை A.T.பிள்ளைஅல்வி

கபிரியல்பிள்ளை A.T.பிள்ளைஅல்வி (ஓய்வுபெற்ற மத்திய வங்கி கணக்காளர் - கொழும்பு) அவர்கள் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கபிரியல்பிள்ளையின் அன்பு மகனும் ஜெயமலர் குட்டானின் அன்புக் கணவரும் நேசன், சிரானி, பிரேம் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் டிலானியின் (அமெரிக்கா) அன்பு மாமனாரும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை A.T.பிள்ளை பேரீ (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற C.T.சொலமன் தம்புத்துரை, டில்லி ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற சொலமன் வாஷிங்டன் (பேபி), காலஞ்சென்ற ரோஸ், சாமுவேல், சாவித்திரி (சின்னபேபி), காலஞ்சென்ற இராசையா சரஸ்வதி, காலஞ்சென்ற சொலமன் பாலரட்டினம், ரைனி (இந்தியா), காலஞ்சென்ற சொலமன் ராஜரட்டிணம், ரோஸ் (லண்டன்), வோல்டர், அரியமலர் தங்கம் (அமெரிக்கா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அமெரிக்காவில் அடக்கம் செய்யப்படும். இவருக்காக கொழும்புத்துறை வீதி, சந்தனமாதா கோயிலில் திருப்பலி பூசை நாளை (27.01.2005) வியாழன் காலை 6.30 மணிக்கு நடைபெறும்.

இப்பூசையில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*45,கொழும்புத்துறை வீதி,*
*பாண்டியன்தாழ்வு,*
*யாழ்ப்பாணம்.*

(40313)(43-18-45)

தகவல்:
சவுந்தரநாயகம் (தம்பி).

### தம்பையா குமாரசாமி (அனலைதீவு)



அனலைதீவு, 6 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி வளாக வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா குமாரசாமி அவர்கள் 24.01.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தம்பையா - சந்திரமதி தம்பதிகளின் செல்வப் புதல்வரும் செல்வச்சோதியின் அன்புக் கணவரும் நடராஜா (அனலைதீவு), கனகரத்தினம் (ஜேர்மனி) அவர்களின் அன்புச் சகோதரனும் விஜயலட்சுமி, மணி ஆகீயோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2005) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*56/11, வளாக வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

(4316)(43-18-45)

தகவல்:
மனைவி
(Dr.றொபின்சன்).

### திருமதி நாகநந்தினி ஆனந்தகுமார்



சந்தை வீதி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகநந்தினி ஆனந்தகுமார் நேற்று (25.01.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஆனந்தகுமார் J.P.(சுகாதார முகாமைத்துவ உதவியாளர் யாழ்.போதனா வைத்தியசாலை, சிவனடி வாசிகசாலைத் தலைவரும் உடுப்பிட்டிச் சந்தி வல்லை வழிப்பிள்ளையார் கோயில் தர்மகர்த்தாவும்) அவர்களின் அன்பு மனைவியும் மோகனப்பிரியா, கீர்த்தனப்பிரியா, பிரியதர்சனா (மாணவிகள், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), மதிசுதன் (மாணவன், உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி), யவனப்பிரியா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நாகரத்தினம் (புகையிரதப் பாதுகாவலர்), ஜெகதல செகசோதி ஆகியோரின் அன்பு மகளும் ஜெகத்குருதாஸ் (மருந்தாளர், யாழ்.போதனா வைத்தியசாலை), வைத்திய கலாநிதி விமலகாந்தன் (யாழ்.போதனா வைத்தியசாலை), ஜெகன்மோகனதாஸ் (படவரைஞர் நீர்ப்பாசன திணைக்களம், கிளிநொச்சி), சிவசரவணபவா (விவசாயத் திணைக்களம், வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் புஸ்பவதி, உதயகுமாரி, சாந்தினி, ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஹம்சா, திவ்யா, ஜெயப்பிரதா (விவசாய பீட மாணவி), தனுஷன் (மருத்துவபீட மாணவன்), திலக்ஷன், யுதர்ஷன், காலஞ்சென்ற கோவர்த்தனன், யஸ்மிகா, கஜந், யசிகாந் ஆகியோரின் அன்பு அத்தையும் பரஞ்சோதி - J.P., சிவமணி ஆகியோரின் அன்பு மருமகளும் சிவகுமார் (Dubai) அவர்களின் அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2005) அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 4 மணியளவில் வல்லை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*'சிவனடிவாசா'*
*சந்தை வீதி,*
*உடுப்பிட்டி.*
*0602212640*

(41324)(43-18-45)

தகவல்:
ப.ஆனந்தகுமார்
(கணவர்).

### கனகசபை செல்லத்துரை

**(ஓய்வுபெற்ற ஆசிரியர்,**
**யா/ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலை)**

ஏழாலை மேற்கைச் சேர்ந்த கனகசபை செல்லத்துரை (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்கள் நேற்று (25-01-2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் செந்திநாதன், ஞானசபேசன் (கிராம அலுவலர், குப்பிழான் வடக்கு), சிற்சபேசன் (மின்னியலாளர், சிமெந்துக் கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை), சிறீதரன் (U.K.), கெங்காதரன் (நோர்வே), புனிதவதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் யோகேஸ்வரி, சந்திரகௌரி, நந்தினி (U.K.), வசந்தா (நோர்வே), இறங்கநாதன் (அதிபர், அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் மகிசன், கௌரீசன், பிரவனன், சஞ்சயன், சஞ்சிதா, சஞ்ஜீவன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-01-2005) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் ஒரு மணிக்கு ஏழாலை உசத்தியோடை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*ஏழாலை மேற்கு,*
*சுன்னாகம்.*

(சீ-41321)(43-18-45)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## இன்று துக்கதினம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணிக்கு விசேட அபிஷேகமும், பூசையும் இடம்பெற்று மோட்ச தீபம் ஏற்றப்படும்.

வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலயத்தில் ஆயிரத்து எட்டு விளக்குகள் ஏற்றப்பட்டு விசேட ஆராதனை இடம்பெறும். தொடர்ந்து அஞ்சலி உரைகள் இடம்பெறும்.

யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் காலை 5 மணியளவில் பொது ஆராதனை வழிபாடு இடம்பெறும். காலை 6.30 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் பிரார்த்தனை இடம்பெறும்.

வடமராட்சியில் நலன்புரி முகாம்களிலும், கடற்கரையோரங்களிலும் நண்பகல் தீபங்கள் ஏற்றப்படும். வடமராட்சி கிழக்கில் பெரும் எண்ணிக்கையானோர் ஒன்றாகப் புதைக்கப்பட்ட இடங்களில் சுடர்கள் ஏற்றப்படும்.

குடாநாட்டில் இன்று பொது இடங்களிலும் சோக கீதம் இசைக்கப்படும். எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்படும்.

வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் மற்றும் பொதுக்கட்டடங்களில் கொடிகளைப்பறக்க விடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி ஆழிப்பேரலையால் உயிரிழந்த மக்களை நினைவு கூரும் நிகழ்வு புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் ஐயனார் கோயிலுக்கு அருகில் சடலங்கள் புதைக்கப்பட்ட இடத்தில் இன்று காலை 8.50 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பொதுச்சுடர் ஏற்றல், தேசியக்கொடி ஏற்றல், இறந்தவர்களுக்கான சுடர் ஏற்றல், மலரஞ்சலி செலுத்துதல் மற்றும் நினைவுரைகள் என்பன இடம்பெறவுள்ளன.

வடமராட்சி கிழக்கில் சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்த மக்கள் அடக்கம் செய்யப்பட்ட இடமான வடமராட்சி ஆழியவளைப் பாடசாலைக்கு அருகில் இன்று காலை 8 மணிக்கு நினைவு வைபவமும் அஞ்சலி நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்தோரின் ஆத்மசாந்தி வேண்டியும் உறவுகளை இழந்து துன்புறும் மக்களுக்கு அமைதி வேண்டியும் இன்று கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் காலை 9 மணிக்குக் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் தலைமையில் விசேட அஞ்சலிக் கூட்டம் இடம்பெறும்.

முன்னதாக கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்திலிருந்து அமைதி ஊர்வலம் புறப்பட்டு கலாசார மண்டபத்தினைச் சென்றடைந்ததும் அங்கு சர்வமதப் பிரார்த்தனை நடைபெறவுள்ளது என்று செயற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

கடல் கொந்தளிப்பால் உயிரிழந்த மக்கள் அனைவரையும் நினைவு கூரும் நிகழ்வு இன்று வவுனியா நகரசபை மைதானத்திலும் மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. வவுனியா மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

(ஐ-7-70-173-17-51-13)

## பொது இடங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளிலும் சிறப்பாக அனுஸ்டிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நினைவுச் சுடரேற்றி இறந்து போன எம் உறவுகளை நினைவுகளில் நிறுத்திக் கொள்ளுமாறு யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரச, கல்வி, கூட்டுறவு, பொதுநிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், பொதுஅமைப்புகள் யாவும் தங்கள் நிறுவனங்களின் முன்பாக கறுப்புக் கொடிகள் பறக்கவிட்டும், பணிபுரிவோர் கறுப்புப்பட்டி அறிந்து தங்கள் நாளாந்த அலுவல்களில் ஈடுபடவும்-

கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், நலன்புரி நிலையங்கள் ஆகியவற்றில் நண்பகல் 12 மணிக்கு ஒளியேற்றவும், பொது இடங்களில் சோக கீதங்கள் இசைப்பதற்கும் பொது அமைப்புகள் ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

உயிரிழந்தவர்களின் உடல்கள் புதைக்கப்பட்ட இடங்களில் கடற்றொழிலாளர் சங்கங்கள், பொது அமைப்புகள் மலர் வணக்கம் செலுத்தி சுடரேற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அனைத்து மக்களும் இன்றைய தேசிய துக்கதினத்தை உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்குமாறு யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் கேட்டுக்கொள்கின்றது.

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாகத் தமிழர் தாயகத்திலும் தெற்காசிய நாடுகளிலும் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் இன்றைய நாள் விடுதலைப் புலிகளினால் தேசிய துக்கதினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையொட்டிப் பல்வேறு அமைப்புகளும் துக்கதினத்தை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்க ஏற்பாடு செய்துள்ளன.

தென்மராட்சியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தென்மராட்சிப் பொது அமைப்புகளின் ஒன்றியம் சர்வமதப் பிரார்த்தனை நிகழ்வை நடத்துகின்றது. யாழ். பொது அமைப்புக்களின் ஒன்றியம் நாவலர் கலாசார மண்டபத்தில் இதனை நடத்துகின்றது.

வடமராட்சி மணற்காட்டுப் பகுதியில் இறந்தவர்களின் உடல்கள் புதைக்கப்பட்ட இடங்களிலும், பருத்தித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்திலும், நெல்லியடியில் சுனாமி அனர்த்த கால நடவடிக்கைச் செயலகத்திலும், பாதிக்கப்பட்டோர் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களிலும், யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் கோண்டாவில் செயலகத்திலும் சர்வமதப் பிரார்த்தனை நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

பிரார்த்தனை நிகழ்வுகள் அனைத்தும் நண்பகல் 12 மணிக்குச் சுடரேற்றலுடன் ஆரம்பமாகின்றன - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(8)

## நிவாரணப் பணிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றது.

எனவேதான் இந்த விடயத்தில் நோர்வேத் தரப்பும் அதிக கரிசனை எடுத்து அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் பறந்து பறந்து செய்தி பரிமாறித் திரிகின்றது. இது தொடர்பான பேச்சுக்களில் ஏற்பட்ட சாதகமான நகர்வை அடுத்தே நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சர் விடர் ஹெல்கிஸன் நேற்றுமுன்தினம் அவசரமாகக் கிளிநொச்சிக்குச் சென்று புலிகளின் தலைமையுடன் பேசினார் - என்று தெரிகின்றது.

பிரஸஸ் மாநாட்டுக்கு முன்பாகப் பொதுக் கட்டமைப்புப் பற்றிய அறிவிப்பை அரசு - புலிகள் இணைந்து வெளியிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று கொழும்பில் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இல்லையேல், நிவாரணப் பணிக்கான பொதுக்கட்டமைப்புப் பற்றி நோர்வே அறிவிப்பை வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(க-8)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும், உணர்வுகளிலுமே தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது.

பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வில் மீண்டும் ஒரு நம்பிக்கை ஒளியை ஏற்ற நாம் அனைவரும் கைகோத்துச் செயற்படுவோம் எனவும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அனைவருக்கும் அழைப்புவிடுத்துள்ளது.

இந்நிகழ்வில் சகல சமூகங்களையும் சேர்ந்த அரசியல் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள், இராஜதந்திரிகள், சிவில் சமூகத்தவர்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்வார்கள் எனத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அறிவித்துள்ளது.

(க-8)

## பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டுள்ளார் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாகப் பொலீஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

(க-8)

நியூ றோயல் அக்கடமி
சங்கத்தானை.
A/L 2007, 2006
கணக்கீடு: செந்தூரன்
பொருளியல்: மதி
ஆரம்பமாகி நடைபெறுகிறது.
(41256)

## கொழும்பு சுதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுக்கப்படும் - என்று நிதியம் விடுத்துள்ள செய்தியில் குறிப் பிடப்பட்டுள்ளது.

கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் இரங்கற் கூட்டமும், விளக்கேற்றல் நிகழ்வும் இன்று மணற்சேனை மயானத்தில் இடம்பெறும்.

கல்முனை தமிழ்ப்பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு, பெரிய நீலாவணை, கல்முனை ஆகிய இடங்களிலிருந்து இன்று மாலை 3.30 மணிக்கு புறப்படும் மக்கள் கூட்டத்தினர், அஞ்சலி நிகழ்வு இடம்பெறும் மணற்சேனை மயானத்துக்கு ஊர்வலமாகச் சென்று சேர்வர்.

மாலை 5 மணியளவில் பிரதேச செயலர் வீ.வாசுதேவன் தலைமையில் அங்கு இரங்கற் கூட்டம் இடம்பெறும். சர்வமதத் தலைவர்கள் உட்படப் பலரும் அஞ்சலி உரை நிகழ்த்துவர். இறுதியில் விளக்கேற்றும் நிகழ்வு இடம்பெறும்.

### திருமலையில் அஞ்சலி

இன்று காலை 8.55 மணிமுதல் 9.20 மணிவரையான நேரத்தில் திருகோணமலையிலுள்ள அனைத்து மத வழிபாட்டுத் தலங்களிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இடம்பெறும் என்று திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையும், தமிழ் மீனவர் ஒன்றியமும் அறிவித்துள்ளன.

அந்த நேரத்தில் வீதிகளில் அனைத்து வாகனங்களையும் நிறுத்தி உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துமாறும் -

தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள் என்பன தமது இடங்களில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்துமாறும் - பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

சகலஇடங்களிலும் கறுப்பு - வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டு துக்கத்தை வெளிப்படுத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஐ-க-7)

## புலிகளின் பதில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தார் விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறைத் தளபதி கேணல் பானு.

இந்தச் சம்பவத்தில் புலிகள் தரப்புக்கு எவ்விதச் சேதங்களும் ஏற்படவில்லை என்றும் -

கருணா குழுவினரின் தாக்குதலில் நான்கு புலிகள் உயிரிழந்தனர் என்று வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என் றும் கேணல் பானு மேலும் தெரிவித்துள்ளார்.

(க-8)

UNIT
கொழும்பு விலைக்கே யாழில்
அனேகரின் எதிர்பார்ப்பு பூர்த்தியாகி விட்டது.
நாங்கள் உங்கள் வேண்டுகோளை ஏற்பவர்களே
ஆம் கனடாவிலிருந்து
Compaq PIII - 733MHz
கணனிகள் இறக்குமதியாகியுள்ளன.
மொனிற்றர் இல்லாமலும் கிடைக்கும்.
சகல புதிய கணனி உதிரிகளும் கொழும்பு விலைக்கே
Intel 2.4 GHz கணனிகள் 49000/- முதல்
(Complete set with DELL Monitor உடன்)
விலை குறைப்புகள் நிரந்தரமல்ல, கையிருப்பு உள்ளவரை மட்டுமே...
Possible which impossible
347, K.K.S. Road
Manohara Theatre Junction,
Jaffna.
Universal Technology,
Station Road,
Chunnakam.

## மரண அறிவித்தல்கள்

### அமரர் கந்தர் ஐயம்பிள்ளை (ஆசாரியார்)

காளிகோயிலடி, தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தர் ஐயம்பிள்ளை நேற்றுமுன்தினம் (24.01.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27-01-2005) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காகத் தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளிகோயிலடி,*
*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.*

(41324)

*தகவல்:*
*மனைவி,*
*பிள்ளைகள்.*

### நாகமணி தில்லையம்பலம்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி தில்லையம்பலம் நேற்று (25.01.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தயாளினி, விமலினி, யசிந்தினி ஆகியோரின் தகப்பனார் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (26.01.2005) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.37,*
*மலர்மகள் வீதி,*
*அரியாலை.*

(41328)

*தகவல்:*
*மருமக்கள்.*

முக்கிய அறிவித்தல்
வன்னி மாவட்டங்களில் நடைபெற்ற இரசாயனவியல் கருத்தரங்கு காரணமாகத் தற்காலிகமாகத் தடைப்பட்டிருந்த அன்பழகன் ஆசிரியரின் வகுப்புகள் இன்றுமுதல் வழமைபோல் நடைபெறும்.
(சி-40651)
A/L 2007 GENERAL CHEMISTRY Sat., Sun. 1-2 p.m.
NEW SCIENCE CENTRE
யாழ்ப்பாணம்.
CHEMISTRY CENTRE
Temple Road. (Green Park முன்னே)
A/L 2007 GENERAL CHEMISTRY Mon., Fri. 5-6 (S.L.T.)
(சி-40652)
By: அன்பழகன் B.Sc.

A/L தமிழ் - 2007
BEACON - யாழ்.
I. A/L தமிழ் 2007 பிரிவு II
ஆரம்பம்: 29.01.2005
சனி, ஞாயிறு 11.00 - 12.00
II. பிரிவு I சனி - ஞாயிறு 9.00 -10.00
NOTE:- 40 மணித்தியால விசேட பிரிவிற்கான அனுமதிகள் 29.01.2005 வரை மட்டுமே!
(41307)

50 %
SCC
மேலதிக விவரம் 10 ஆம் பக்கத்தில்
(சி-40636)

பதிவு செய்து விட்டீர்களா?
விரையுங்கள்
அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
30-01-2005க்கு முன் பதிவு செய்து கொள்ளவும்.
80% OFF
COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி.யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
0777 222422, 0773151647




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.